Vlambaram - January 15, 2025.qxp_Vlambaram-Front 2025-01-15 1:55 PM Page 1






35ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com




நதி: 35 பாலம்: 02 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JANUARY 15, 2025

# கனடியப் பிரதமர் பதவி விலகுகிறார்!

ஒன்பது ஆண்டுகள் கனடியப் பிரதமராகப் பதவி வகித்த ஜஸ்ரின் ரூடோ ஒட்டாவாவில் உள்ள அவரது உத்தியோக பூர்வ இல்லமான ரிடோ(Rideau) இல்லத்திற்கு வெளியே ஊடகவியலாளர்களுக்கு 2025 ஜனவரி 6ஆம் திகதி ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு மொழிகளில் பேசும்போது, தான் பிரதமர் பதவியில் இருந்தும், ஆளும் லிபரல் கட்சியின் தலைவர் பதவியில் இருந்தும் விலகுவதாக அறிவித்தார்.

லிபரல் கட்சி இன்னொருவரைத் தலைவராகத் தெரிவு செய்யும்வரை தான் லிபரல் கட்சியின் தலைவர் பதவியிலும், பிரதமர் பதவியிலும் இருப்பேன் எனவும் கூறினார். அவர் தனது உரையில், "கனடியர்களின் தாராள மனப்பான்மை மற்றும் மீள்எழும் நெகிழ்ச்சி போன்றவற்றின் ஊக்கத்தால், நான் ஒவ்வோர் காலைப் பொழுதிலும் பிரதமராக நித்திரையிலிருந்து எழும்புகிறேன். இந்தப் பிரதமர் அலுவலகத்தில் பணியாற்றும் ஒவ்வொரு நாளும் அதுவே எனக்கு உந்து சக்தியாக இருக்கிறது.

அதனால்தான் 2015ஆம் ஆண்டு முதல் நான் இந்த நாட்டிற்காக, உங்களுக்காக, நடுத்தர வர்க்கத்தை வளர்க்கவும், வலுப்படுத்தவும் போராடி வருகிறேன். பெருந்தொற்று நோய்ப்பரவல் காலத்தில் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கவும், நல்லிணக்கத்தை முன்னெடுத்துச்செல்லவும், இந்தக் கண்டத்தில் தடையற்ற வர்த்தகத்தைப் பாதுகாக்கவும் இதனால்தான் அணி திரண்டோம். எங்களது ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும், உக்ரைன் நாட்டினுடனும் நாங்கள் வலுவாக நிற்கிறோம்.

காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடவும், நமது பொருளாதாரத்தை எதிர்காலத்திற்குத் தயார்ப்படுத்தவும் நாம் தற்போது உலகில் ஒரு முக்கியமான தருணத்தில் இருக்கிறோம்.

நண்பர்களே, நான் ஒரு போராளி என்று உங்கள் அனைவருக்கும் தெரியும். என் உடம்பில் உள்ள ஒவ்வொரு எலும்பும் என்னை எப்பொழுதும் போராடிக்கொண்டு இருக்குமாறு கூறுகிறது. ஏனென்றால் நான் கனடியர்கள் மீது ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளேன். அத்துடன் இந்த நாட்டைப் பற்றியும் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளேன். மேலும், கனடியர்களின் நலனுக்காக நான் எப்போதும் உந்து சக்தியாக இருப்பேன்.

உண்மை என்னவென்றால், இவற்றைச் செய்வதற்கு சிறந்த முயற்சிகள் எடுக்கக்கூடிய நிலையில் எமது அரசு இருந்தாலும், கனடிய வரலாற்றிலேயே நீண்ட காலமாகப் பதவியில் இருந்த சிறுபான்மை அரசான எமது அரசு தற்போது பல மாதங்களாக முடங்கியுள்ளது.



அதனால்தான் இன்று ஜனவரி 6ஆம் திகதி காலை புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஒன்றைக் கூட்ட வேண்டும் என கனடிய ஆளுநர் நாயகத்திடம் அறிவுறுத்தினேன். அவரும் எனது கோரிக்கையை ஏற்று நாடாளுமன்ற அமர்வுகளை மார்ச் 24ஆம் திகதிவரை ஒத்திவைக்க அனுமதி அளித்தார். இதனால் கனடிய நாடாளுமன்ற அமர்வுகள் மார்ச் 24ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்படும்.

கடந்த விடுமுறை நாட்களில் எனது குடும்பத்தினருடன் எனது எதிர்காலத்தைப் பற்றி நீண்ட நேரம் கலந்துரையாடுவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. எனது வாழ்க்கை முழுவதும் தனிப்பட்ட முறையில் நான் அடைந்த எந்த வெற்றி என்றாலும் என்ன அல்லது எனது தொழில் என்றாலும் என்ன எல்லாமே அவர்களது ஆதரவினாலும், அவர்களது ஊக்கத்தாலும்தான் எனக்குக் கிடைத்தது. எனவே நேற்று இரவு உணவின்போது நான் இன்று உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் முடிவைப்பற்றி எனது பிள்ளைகளிடம் கூறினேன்.

நாடு தழுவிய போட்டிச் செயல்முறை மூலம் லிபரல் கட்சி தனது அடுத்த தலைவரைத் தெரிவு செய்த பின்னர் நான் லிபரல் கட்சித்தலைவர் பதவியையும் மற்றும் பிரதமர் பதவியையும் துறக்க உள்ளேன். நேற்று இரவு லிபரல் கட்சி நிர்வாகத் தலைவரிடம் இந்தச் செயல்முறையைத் தொடங்குமாறு கேட்டுள்ளேன்.

அடுத்த தேர்தலில் இந்த நாடு ஒரு பிரதமரைத் தெரிவு செய்ய அவர்களுக்கு உண்மையான தெரிவுகள் இருக்க வேண்டும். எனக்கு உள்கட்சிப் பூசல்கள் இருப்பதால் நான் அடுத்த தேர்தலில் மக்களுக்கு சிறந்த தேர்வாக இருக்க முடியாது.

இந்த நாட்டின் ஜனநாயக வரலாற்றில் கனடாவின் லிபரல் கட்சி ஒரு முக்கிய நிறுவனமாகும். லிபரல் கட்சிக்குத் தெரிவு செய்யப்படும் புதிய தலைவர் புதிய பிரதம மந்திரியாகப் பதவியேற்று அடுத்த தேர்தலில் லிபரல் கட்சியினை அதன் இலட்சியங்களை நோக்கிக்கொண்டு செல்வார். வரும் மாதங்களில் லிபரல் கட்சி புதிய தலைவரைத் தெரிவு செய்யும் என்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

தொற்று நோய்க்குப் பிந்திய பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், பல சிக்கல்கள் நிறைந்த உலகில் கனடாவின் நலன்களை மேம்படுத்தவும் 2021ஆம் ஆண்டில் மூன்றாவது முறையாக நாம் தெரிவு செய்யப்பட்டோம். இவ்வேலையைத்தான் நானும், எமது கட்சியினரும் கனடியர்களுக்காகத் தொடர்ந்து செய்வோம்" என்று கூறினார்.

ஜஸ்ரின் ரூடோவின் பதவி விலகல் தொடர்பான அறிவிப்பைத் தொடர்ந்து உத்தியோகபூர்வ எதிர்க்கட்சித்தலைவரான பழமைவாதக் கட்சியின் தலைவர் பியர் பொலியவ் (Pierre Poilievre) மத்திய அரசிற்கு உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டும் என வலியுறுத்தினார். அவர் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில், "லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களால் வெறுக்கப்பட்ட தலைவரை தரைவிரிப்புக் கம்பளத்தின் கீழ் துடைத்துத் தள்ளிவிட்டு தங்களது சம்பளங்களையும் ஓய்வூதியத்தையும் பாதுகாக்கச் சில மாதங்களில் புதிய தலைவருடன் உங்களை ஏமாற்ற முயல்வர்" என்றார்.

புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், "நாட்டின் பிரச்சினை ஜஸ்ரின் ரூடோ மட்டுமல்ல, லிபரல் கட்சியின் ஒவ்வொரு மந்திரியும்தான் லிபரல் அரசின் எல்லாச் செய்கைகளுக்கும் உடந்தையாக இருந்தார்கள். கனடியர்களின் அதிகரித்த வாழ்க்கைச் செலவு மற்றும் நொறுங்கிப் போகும் சுகாதார பாதுகாப்புச் சேவை என்பவற்றைப் பார்த்துக்கொண்டு லிபரல் கட்சியின் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதை நிவர்த்தி செய்ய முயற்சிகள் செய்யாமல் இருந்தனர்" என்றார்.

கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ கட்சித்தலைவர் பதவியில் இருந்தும் பிரதமர் பதவியில் இருந்தும் தான் விலகப் போவதாக ஜனவரி 6ஆம் திகதி அறிவித்ததைத் தொடர்ந்து லிபரல்கட்சியின் தேசிய இயக்குநர் குழு ஜனவரி 9ஆம் திகதி முறைப்படிகூடி கனடிய லிபரல் கட்சியின் யாப்பின்படி அடுத்த லிபரல் கட்சித்தலைவர் தெரிவிற்கான படிமுறைகளைத் தெரிவு செய்தது. அதன்பின்னர், லிபரல்கட்சியின் நிர்வாகத் தலைவர் சச்சித் மெஹ்ரா (Sachit Mehra) ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில், "ஒரு வலுவான மற்றும் பாதுகாப்பான நாடு தழுவிய செயல்முறை

தொடர்ச்சி 05ஆம் பக்கம்












Vlambaram - January 15, 2025.qxp_Vlambaram-Front 2025-01-15 1:55 PM Page 2




RENT | BUY | SELL | INVEST | LEASE

# In CANADA from anywhere in the world

- Respectable Real Estate Brokerage based in Toronto
- Over 20 Years in the business
- Over 150 Sales Representatives.
- Brokers combined experience over 50 Years
- Well connected with Builders, Developers, Mortgage Brokers, Home Inspectors, Insurers ....






For
more information
Feel Free
to call or
visit to
www.hlgtarealty.com



HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST
## FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

Vlambaram - January 15, 2025.qxp_Vlambaram-Front  2025-01-15  1:55 PM  Page 4



# இயல்பா அல்லது இயலாமையா?

## – அரவின் –

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போதும், மக்களின் வாழ்வியல் நிலையில், எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

ஏனென்றால், ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் தேசிய மக்கள் சக்தி அளித்த வாக்குறுதிகள் எதுவும், இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

பொருளாதார நெருக்கடி இருக்கின்ற போதும், அதிலிருந்து நாட்டை மீட்கப் போவதாக வாக்குறுதி அளித்தே இந்த அரசாங்கம், பதவிக்கு வந்தது. எனவே, கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் இருப்பதில் தவறில்லை.

வாக்குறுதி அளித்தபடி எரிபொருள் விலைகள், எரிவாயு விலைகள் குறைக்கப் படவில்லை. மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்படவில்லை. பொருட்களின் விலைவாசியும் குறையவில்லை.

மாறாக அரிசி 300 ரூபாய்க்குமேல் விற்கப்படும் நிலை உருவாகி இருக்கிறது. அரிசி இறக்குமதியை நிறுத்துவோம் எனக் கூறிய தேசிய மக்கள் சக்தி, ஆட்சிக்கு வந்து முதலாவது அமைச்சரவைக் கூட்டத்திலேயே, அரிசி இறக்குமதிக்குத் தான் அனுமதி வழங்கியது.

இதுவரை ஒன்றேகால் இலட்சம் மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டு இருக்கிறது, ஆனாலும் அரிசியின் விலையும் குறையவில்லை, தட்டுப்பாடும் நீங்கவில்லை.

இதுவரை காலமும் தன்னிறைவாக இருந்த உப்புக்கூட இப்பொழுது இறக்குமதி செய்யப்படுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

விளம்பரம்
VLAMBARAM™
35ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

தைப்பொங்கலுக்குத் தேவையான அரிசி யைக்கூட பெறமுடியாத நிலை பல இடங்களில் காணப்பட்டது.

ஒரு கிலோ எடையுள்ள, பொங்கல் பொருட்கள் அடங்கிய பொதி, 1950 ரூபாவுக்கு யாழ்ப்பாணத்தில் விற்கப்பட்டது. இவ்வாறான சூழலில்தான், அரசாங்கத்தை நோக்கி மக்கள் கேள்விகளை எழுப்பு கின்றனர். எதிர்க்கட்சிகளும் கேள்வி எழுப்பத் தொடங்கியுள்ளன.



இந்நிலையில், அரசாங்கம் கிளீன் சிறீலங்கா என்ற வேலைத்திட்டத்தை ஆரம்பித்திருக்கிறது.

ஜனவரி முதலாம் திகதி தொடங்கிய இந்த வேலைத்திட்டம் பரந்துபட்ட ஒன்றாகக் கருதப்பட்டாலும், அதற்குத் தெளிவான வரையறை, இன்னமும் அரசாங்கத்தினால் அளிக்கப்படவில்லை.

சுற்றுப்புறச் சூழலின் தூய்மை தொடக்கம், அரசியலில் அரச நிர்வாகத்தில் தூய்மையை ஏற்படுத்துவதுவரை, அது விரிவான ஒன்றாக இருக்கும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், கிளீன் சிறீலங்கா திட்டம், பொதுப் பாதுகாப்பு அமைச்சின் ஊடாக பொலிஸ் நிலையங்களில் இருந்து செயற்படுத்தப்படுவது, சந்தேகங்களையே ஏற்படுத்தியிருக்கிறது. இத்திட்டத்தில், இப்போது நடப்பது, வாகனங்களைச் சோதனையிடும் நடவடிக்கை மட்டும்தான்.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தில் இருந்தபோது, போதைப்பொருள் ஒழிப்புக் காக என்று கூறி, யுக்திய என்ற பெயரில், தேடுதல் நடவடிக்கை பொலிசாரால் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அது போதைப் பொருட்களையும் ஒழிக்க வில்லை, போதைப்பொருள் கடத்தல்காரர் களையும் கட்டுப்படுத்தவில்லை.

பதில் பொலிஸ் மா அதிபராக இருந்த, நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்ட, தேச பந்து தென்னக்கோனுக்கு பொலிஸ்மா அதிபர் பதவியைக் கொடுப்பதற்காகவே, அந்த யுக்திய நடவடிக்கை, அப்போதைய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலசின் ஆலோசனையின் பேரில் முன்னெடுக்கப்பட்டது.

புதிய அரசாங்கம் வந்தவுடன் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. அதற்கு மாற்றாக இப்பொழுது பொலிசார் கிளீன் சிறீலங்கா திட்டத்தில் வேலை செய்கின்றனர்.

வாகனங்களில் உள்ள அலங்காரங்களை யும், அதிக ஒலியெழுப்பும் ஹோர்ன்களையும் அகற்றும் வேலைதான் இப்பொழுது முன்னெடுக்கப்படுகிறது. இதுதான் கிளீன் சிறீலங்கா திட்டமா என்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்புகின்றன.

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசாங்கம், அதனை மறைப்பதற்காகவே கிளீன் சிறீலங்கா திட்டத்தை முன்னெடுப்ப தாக, எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளைப் புறம்தள்ளிவிட முடியாமல் உள்ளது.

நாடு பொருளாதார ரீதியாக பெரும் சரிவைக் கண்டிருக்கிறது. மக்களின் பொருளாதார நிலை மோசமான நிலையில் இருக்கிறது.

இலங்கையர்கள் ஒவ்வொருவரின்மீதும் உள்ள கடன்சுமை 1,322,793 ரூபாவாக உயர்ந்திருக்கிறது. ஒரே வருடத்தில் இது 88,435 ரூபா அதாவது 7.16 சதவீதம் அதிகரித்திருக்கிறது. இது நாட்டின் ஒட்டுமொத்தக் கடன் அதிகரித்துள்ளதன் விளைவாகும்.

இந்தக் கடன் சுமை குறையாமல் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற முடியாது. அதேபோல, நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடியில் இருக்கின்றபோது, அரசாங்கம் முன்னெடுக் கின்ற திட்டங்கள் அதிலிருந்து அவர்களை மீட்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

ஆனால் ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசாங்கம், அவ்வாறான ஒரு திட்டத்தை வடிவமைக்கும் அளவுக்கு அனுபவம் வாய்ந்த ஒன்றாகத் தெரியவில்லை. தேவையற்ற விடயங்களில், வீண் விவாதங் களில் ஈடுபட்டு நேரத்தை விரயம் செய்கின்றனர்.

பிரதமர் ஹரிணி அமரசூரியகூட, எதிர்க் கட்சியினருடன் தேவையற்ற வாதங்களை முன்வைக்கின்ற இயல்பைக் கொண்டு இருக்கிறார்.

அவசியமான கேள்விகளுக்கும், குற்றச் சாட்டுகளுக்கும் பதிலளிக்க வேண்டிய பொறுப்பு பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இருந்தாலும், அநாவசியமான சின்னஞ் சிறிய சச்சரவுகளுக்கெல்லாம் அவர்கள் பதில் கொடுக்க வேண்டியதில்லை.

ஆனால், தற்போதைய அரசாங்கம் தமது கட்சியினருக்கு ஜேஆரின் பாணியில், வாய்ப்பூட்டுப் போட்டு வைத்திருக்கிறது. அவர்கள் எல்லோரும் வாய் திறந்து பேச முடியாது.

கட்சியின் அனுமதியில்லாமல் அரசாங்கம் தொடர்பான நிலைப்பாடுகளை வெளிப் படுத்த முடியாது. அதற்கு இறுக்கமான கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது. இதனால்தான், பிரதமரோ ஜனாதிபதியோ தான், எல்லா குற்றச்சாட்டுகளுக்கும் கருத்துகளுக்கும் பதில் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கின்றனர்.

இது மாத்திரமல்ல, இப்போது வெளிநாட்டு இராஜதந்திரிகளை அரசாங்க அதிகாரிகள் சந்திப்பதற்குக்கூட அரசாங்கம் தடைகளைப் போட்டிருக்கிறது.

வெளிநாடு ஒன்றிலிருந்து செல்லும் இராஜதந்திரக் குழுவினரால், இலங்கையில் உள்ள அரசாங்க அதிகாரிகளையோ பிரமுகர்களையோ தமது விருப்பப்படி சந்திக்க முடியாது.

வெளிவிவகார அமைச்சின் ஊடாகத் தொடர்புகொண்டு அவர்களின் அனுமதி பெற்று, அவர்கள் நேரம் ஒதுக்கிக் கொடுத்தால் மாத்திரமே, அவ்வாறான சந்திப்புகளை நடத்த முடியும்.

அதைவிட சந்திப்பில் வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவரும் பங்கேற்பார்.

இப்படி ஒரு கட்டுப்பாடு ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக அனைத்து அமைச்சுகள், மற்றும் மாகாண நிர்வாகங் களுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு பக்கத்தில் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு தவறிக் கொண்டிருக்கின்ற சூழலில், இன்னொரு பக்கத்தில் அரசாங்கத்துக்குள் பிடியை இறுக்குவதில் கவனம் செலுத்தப்படுகிறது.

அண்மையில் சபாநாயகரைச் சந்தித்த இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, இலங்கையின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிப்பதற்கு இந்தியா உதவத் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கிறார்.

இலங்கையின் தற்போதைய நாடாளு மன்றம், குறிப்பாக புதிய உறுப்பினர்கள் அனுபவம் இல்லாதவர்கள் என்பதே இந்தியத் தூதுவர் இந்தப் பயிற்சி யோசனையை முன்வைக்கக் காரணம்.

எதை, எப்போது, எப்படி பேசுவது என்று தெரியாதவர்களாக, புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். அதனால் நிறைய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதனால் பெரும்பாலான உறுப்பினர்கள், குறிப்பாக ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட வாய்திறக்காமல் இருக்கின்றனர்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த 150 பேர் இம்முறை புதிதாக நாடாளுமன்றத்துக்குள் வந்திருக்கின்றனர்.

அவர்களுக்கு நாடாளுமன்ற நடைமுறை களும் தெரியவில்லை. நாடாளுமன்றத் தைக் கையாளும் திறனும் இல்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து மருத்துவ நிர்வாகி யாக இருந்த ஒருவர், பாடசாலை அதிபர், தொழிற்சங்கப் பிரமுகர் ஆகியோர் இம்முறை ஆளும்கட்சி சார்பில் நாடாளு மன்றம் சென்றுள்ள போதும், அவர்களை செயலற்றவர்களாகத்தான் தற்போதைய அரசாங்கம் வைத்துக்கொண்டிருக்கிறது. அவர்களுக்கு யாழ்ப்பாண மாவட்ட ஒருங்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

Vlambaram - January 15, 2025.qxp_Vlambaram-Front 2025-01-15 1:55 PM Page 5



# கனடியப் பிரதமர்.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மூலம் லிபரல் கட்சி 2025 மார்ச் 9ஆம் திகதி தனது புதிய தலைவரைத் தேர்ந்து எடுக்கும். அத்துடன் 2025ஆம் ஆண்டில் நடைபெற இருக்கும் பொதுத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறவும் லிபரல் கட்சி தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளும்" என்று தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், "நாடு முழுவதிலும் உள்ள லிபரல் கட்சி உறுப்பினர்கள் எங்களது கட்சி மற்றும் எமது நாட்டின் எதிர்காலத்தை திட்டமிட்டு வடிவமைக்கும் சிந்தனையுடன் விவாதத்தில் ஈடுபடுவதற்கான நேரமிது. எமது கட்சியின் இந்த உன்னதமான தருணத்தில் பங்குபெற அனைத்து லிபரல் கட்சி உறுப்பினர்களையும் ஊக்குவிக்கிறேன்" என்றார்.

லிபரல் கட்சித் தலைமைப் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளராகச் சேருவதற்கு நுழைவுக் கட்டணமாக போட்டியாளர் ஒருவர் $350,000 செலுத்த வேண்டும். அவர் தலைமைப் போட்டிக்கான பந்தயத்தில் பங்கேற்பதை 2025 ஜனவரி 23ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்க வேண்டும்.

லிபரல் கட்சியின் யாப்பின்படி லிபரல் கட்சியில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினராகச் சேர்ந்து இம்முறை நடைபெறும் லிபரல் கட்சியின் தலைவர் தெரிவில் வாக்களிக்கத் தகுதிபெறுவதற்கான இறுதி நாள் 2025 ஜனவரி 27ஆம் திகதியாகும்.

இம்முறை நடைபெறும் லிபரல் கட்சியின் தலைமைப் போட்டியில் யார் வாக்களிக்கத் தகுதி உள்ளவர்கள் என்ற விபரத்தையும் லிபரல் கட்சியின் தேசிய இயக்குநர் குழு புதுப்பித்துள்ளது. அதன்படி, தகுதியான வாக்காளர் பின்வரும் ஐந்து தகைமைகளைக் கொண்டிருக்கவேண்டும்.

* குறைந்தது 14 வயது உடையராக இருக்க வேண்டும்.
* கனடியக் குடியுரிமை உடையவராக அல்லது கனடாவில் நிரந்தர வதிவிட உரிமை உள்ளவராக அல்லது இந்தியச் சட்டத்தின்கீழ் (Indian Act) உரிமை பெற்றவராக இருக்க வேண்டும்.
* கனடாவில் உள்ள மத்திய அரசிற்காக போட்டியிடும் வேறு எந்த அரசியல் கட்சியிலும் உறுப்பினராக இருக்கக் கூடாது.
* லிபரல் கட்சியின் நோக்கங்களை ஆதரிப்பவராக இருக்க வேண்டும்.
* லிபரல் கட்சியின் உறுப்பினராகப் பதிவு செய்யப்பட்டிருக்கும்போது, லிபரல் கட்சியின் வேட்பாளராகத் தவிர வேறு எம்முறையிலும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தனது விருப்பத்தை பகிரங்கமாகத் தெரிவிக்காதவராக இருக்க வேண்டும்.

இம்முறையே கனடிய வரலாற்றில் கட்சித் தலைமைத் தேர்தலுக்கான அதிகபட்ச நுழைவுக்கட்டணத்தை லிபரல் கட்சி நிர்ணயித்துள்ளது. இப்பணத்தை வேட்பாளர் தவணை முறையில் செலுத்தலாம் எனத் தெரிவித்துள்ள லிபரல் கட்சியின் தேசிய இயக்குனர் குழு தலைமைப் போட்டியின் முடிவின் பின்னர் ஏதேனும் ஒருபகுதி வேட்பாளருக்குத் திரும்பக் கொடுக்கப்படுமா என்பதை இதுவரை தீர்மானிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளது.

ஜஸ்ரின் ரூடோ லிபரல் கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட 2013ஆம் ஆண்டில் நடைபெற்ற தலைவர் தெரிவிற்கான தேர்தலில் நுழைவுக் கட்டணமாக $75,000 இருந்தது.

2022ஆம் ஆண்டில் நடைபெற்ற பழமைவாதக் கட்சிக்கான தலைவர் தெரிவிற்கான தேர்தலில் நுழைவுக்கட்டணமாக $300,000 இருந்தது. ஆனால், இதில் தேர்தல் முடிவின் பின்னர் $100,000 வேட்பாளர்களுக்குத் திருப்பிக் கொடுக்கக் கூடிய பணமாக இருந்தது. கட்சித் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்ட வேட்பாளர் கட்சியின் அனைத்துப் போட்டி விதிகளையும், தவறாமல் பின்பற்றியிருந்தால் அவரின் நுழைவுக் கட்டணத்தில் $100,000 தேர்தல் முடிவின்பின் திருப்பி அளிக்கப்படும் என விதிமுறை இருந்தது.

லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் கனடிய தேர்தல் விதிகளைப் பின்பற்ற வேண்டும். அதாவது, தனிநபர் ஒருவரிடம் இருந்து ஆகக்கூட $1,750 மட்டுமே நன்கொடையாகப் பெறலாம். அத்துடன் அவர்கள் சங்கங்கள் (Union) மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் (Corporate) இடமிருந்து நன்கொடைகள் பெறமுடியாது.

லிபரல் கட்சித் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு இவ்வாறு அதிகூடிய நுழைவுக் கட்டணம் விதித்ததற்கு முக்கிய காரணம் வலுவான நிதிதிரட்டும் திறமையுடைய தலைமைப் பதவிக்கு வர விரும்பும் தீவிர வேட்கையுள்ள வேட்பாளர்கள் மட்டுமே போட்டியில் நுழைவதை உறுதி செய்வதற்காகும். அத்துடன் கட்சித்தலைமை வகுத்துள்ள தேர்தல் விதிகளுக்கு இணங்காதவர்களுக்கு அபராதம் விதிப்பதற்குமாகும்.

ஜஸ்ரின் ரூடோ பதவி விலகப் போவதாக அறிவித்ததைத் தொடர்ந்து இதுவரை இருவர் லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்கு தாங்கள் போட்டியிடப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.



Ottawa MP Chandra Arya Thanks:Chandra Arya/X

ஒட்டாவாவில் உள்ள Nepean தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முதுமானி கலைப்பட்டதாரியான Chanra kanth Arya. தான் பிரஞ்ச் மொழி கற்று வருவதாக இவர் கூறினாலும், ஆங்கில மொழியில் மட்டுமே சரளமாகப் பேசும் வல்லமை உடையவர். இவரது கொள்கைகள் கனடாவின் முடியாட்சி முறையை மாற்றி குடியரசாகக் கொண்டு வருவது, பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிப்பது மற்றும் கனடாவை சக்தி வளத்தில் வல்லரசாகக் கொண்டு வருவது என்பவையாகும்.



Liberal MP Frank Baylis Thanks: Adrian Wyld/CP

மொன்றியலில் உள்ள Pierrefonds Dollard தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான மின்னியல் பொறியிலாளரும், தொழிலதிபருமான Fran K Bayils. இவர் தனது தொழிலதிபர் பின்னணி அமெரிக்க அதிபராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் டிரம்ப் உடன் பேச்சுவார்தைகள் நடத்தி ஒரு நல்ல பொருளாதாரத் திட்டத்தை கனடாவிற்கு ஏற்படுத்தத் தகுதியைத் தருகிறது என்கிறார்.



Former Bank of Canada governor Mark Carney Thanks: Darryl Dyck/Canadian Press

இவர்கள் இருவரையும்விட பின்வரும் சிலரும் எதிர்வரும் நாட்களில் லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்கான தேர்தலில் போட்டியிடலாம் என ஊடகவியலாளர்கள் கூறுகின்றனர்.

Mark Carney - கனடாவில் வடமேற்கு பிரதேசத்தில் பிறந்த இவர் Harvard மற்றும் Oxford பல்கலைக்கழகப் பட்டதாரியும் பொருளாதாரத் துறையில் முனைவர் பட்டம் பெற்றவருமாவார். கனடிய வங்கியின் ஆளுநராகவும், இங்கிலாந்து வங்கியின் ஆளுநராகவும் பதவி வகித்தவர்.



Former B.C. Premier Christy Clark Thanks:hristyclark via X

Christy Clark - கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் பிறந்த இவர் Edinburg பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானம் பயின்றவர். பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண முதல்வராகப் பதவி வகித்தவர். ஆங்கில மொழியில் மட்டுமே சரளமாகப் பேசும் வல்லமை உடையவர். பிரஞ்ச் மொழி கற்று வருவதாகத் தெரிவித்துள்ளார்.



Liberal MP Chrystia Freeland

Chrystia Freeland - கனடாவின் அல்பேட்டா மாகாணத்தில் பிறந்த இவர் Harvard மற்றும் Oxford பல்கலைக் கழகங்களின் பட்டதாரியாவார். ஊடகத் துறையில் பணியாற்றி வந்தவர். பின்னர் ஜஸ்ரின் ரூடோவின் அமைச்சரவையில் துணைப்பிரதமராகவும், நிதி மந்திரியாகவும் பதவி வகித்தவர். இவர் ஆங்கிலம், பிரஞ்ச் உட்பட உக்ரைன், ரஷியன் மற்றும் இத்தாலியன் மொழிகளைப் பேசும் வல்லமை உடையவர்.


நீண்ட ஆயுளும், நிறைந்த செல்வமும்
இல்லத்தில் இன்பமும் உள்ளத்தில்
மகிழ்ச்சியும் பொங்க
இனிய தைத்திருநாள் வாழ்த்துகள்

தமிழர் பாரம்பரிய பலகாரங்கள்
விசேட வைபவங்களுக்கான லட்டு, கேசரி,
தொதல், அச்சுப் பலகாரம், அரியதரம்,
பயத்தம் பலகாரம் போன்ற பலகார வகை
களைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
778.846.5460/416.287.8164


Vlambaram - January 15, 2025.qxp_Vlambaram-Front 2025-01-15 1:55 PM Page 6



# தடுமாறும் தமிழ்க் கட்சிகள்

– முகிலன் –

சாண் ஏறினால் முழம் சறுக்கும் என்பது போல, தமிழர் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளும், சிறிது முன்னேறினால் பெரிய பின்னடைவு ஏற்படுவது வழக்கமாகி விட்டது.

அண்மையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு பெரிய ஒரு பின்னடைவு ஏற்பட்டது.

வாக்குகளால், ஆசனங்களால் ஏற்படுகின்ற இழப்புகள் இயல்பானவை. ஆனால், இம் முறை ஏற்பட்ட இழப்பு அசாதாரணமானது.

இதற்கு முன்னர், வடக்குக் கிழக்கில் வாக்குகளையோ ஆசனங்களையோ பெற்றுக் கொண்டிருக்காத, சிங்களத் தேசிய கட்சி ஒன்று, பிரதான கட்சியாக உருவெடுத்திருக்கிறது. இது தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு ஏற்பட்ட முக்கியமான ஒரு பின்னடைவு.

இந்த நிலையில்தான், தமிழ்த் தேசியக் கட்சிகள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துகின்ற முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு இருக்கின்றன.

இந்த ஒற்றுமை முயற்சி, கட்சிகளை ஒன்றாக்குவதோ அல்லது ஒரே கூட்டணியின் கீழ் கொண்டு வருவதோ அல்ல.

இந்த முயற்சிகளின் அடிப்படை, தற்போதைய அரசாங்கம் உருவாக்கப் போவதாகக் கூறுகின்ற புதிய அரசமைப்புக்காக தமிழர் தரப்பின் சார்பில் பொது நிலைப்பாட்டை அறிவிப்பதாகும்.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய வகையில் தமிழருக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கக்கூடிய வகையில் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான யோசனைகளை முன்மொழிவதே இதன் நோக்கம்.

நல்லாட்சி அரசாங்கம் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகளை முன்னெடுத்தபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் பங்கெடுத்தது.

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த எம்.ஏ.சுமந்திரன் அதில் முக்கிய பங்கு வகித்தார்.

அந்த அரசமைப்பு உருவாக்கக் குழுவில் தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும் இடம்பெற்றிருந்தார். தற்போதைய பிரதமர் ஹரிணி அமரசூரியவும், உபகுழு ஒன்றில் அங்கத்துவம் வகித்திருந்தார்.



இப்போதைய அரசாங்கத்திடம், புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு புதிதாக முயற்சிகளை தொடங்கும் திட்டமில்லை.

ஏற்கனவே உருவாக்கப்பட்ட அரசமைப்பு யோசனையிலிருந்து புதிய அரசமைப்பைக் கட்டி எழுப்புவதுதான் அவர்களின் நோக்கம். இதனை அவர்கள் தெளிவாகக் கூறியிருந்தனர்.

ஏனென்றால், அது ஏக்கிய ராஜ்ய என்ற ஒற்றையாட்சியை உறுதி செய்யும் வகையில் இருந்தது. அந்த யோசனையை தமிழரசுக் கட்சி ஏற்றுக்கொண்டிருந்தாலும், தமிழ் மக்களிடம் அதற்குப் பரவலான ஆதரவு கிடைத்திருக்கவில்லை. ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளும் அதற்கு அங்கீகாரம் அளிக்கவில்லை.

இப்போதைய அரசாங்கம் அரசமைப்பு ஒன்றை உருவாக்கப் போவதாகக் கூறினாலும், இதுவரையில் அதற்கான எந்த செயல்முறையிலும் இறங்கவில்லை. ஐந்து ஆண்டுகள் பதவிக்காலம் இருக்கிறது, அதற்குள் வாக்குறுதிகளை நிறைவேற்றினால் சரி என்ற ரீதியாகவே அரசாங்கம் செயற்படுகிறது.

அதைவிட, தற்போதைய அரசாங்கம் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது.

அரசமைப்பு உருவாக்கத்தை முன்னெடுத்தால், அரசாங்கத்திற்கு எதிரான விமர்சனங்கள் அதிகரிக்கும் என்பதால், இப்போதைக்கு இந்த முயற்சியைத் தொடங்கும் உத்தேசம் அதற்கு இல்லைப் போலவே தெரிகிறது.

ஆனால் திடீரென ஒரு நாள் அரசாங்கம், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியை முன்னெடுக்கின்றபோது, தமிழர் தரப்பு அதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

பொதுவான ஒரு தீர்வு யோசனையை முன்வைக்க வேண்டும். அதனை அடிப்படையாக வைத்து அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்த வேண்டும்.

இதனைத் திடீரென செய்ய முடியாது. அதற்கான தயார்படுத்தல் தேவை. கூட்டு ஒத்துழைப்பு, பேச்சுகள், கலந்துரையாடல்கள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்.

அவற்றின் அடிப்படையில் இணக்கமான ஒரு வரைவைத் தயாரிக்க வேண்டும்.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரளவுக்கு இணக்கப்பாட்டுக்கு வந்திருக்கின்றன.

தமிழ் காங்கிரஸ் தலைவர், கஜேந்திரகுமாரின் தலைமையில் இதற்கான ஒரு முயற்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அவர் முதலில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனைச் சந்தித்துப் பேசினார். பின்னர் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உடன் கலந்துரையாடினார்.

இரண்டாவது கட்டக் கலந்துரையாடலின் பின்னர், எதிர்வரும் 25ஆம் திகதி தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகளை ஒருங்கிணைத்து இது பற்றிப் பேசுவது எனத் தீர்மானித்திருக்கின்றனர்.

கஜேந்திரகுமார், முன்னர் தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வு யோசனையின் அடிப்படையில், ஒரு திட்டத்தை முன்மொழிவதற்கு விரும்புகிறார். அதன் அடிப்படையிலேயே இந்தப் பேச்சுகளை முன்னெடுக்க முனைந்து இருக்கிறார். ஆனால் தமிழரசுக் கட்சி இதற்கு இணங்க வேண்டும்.

அந்தக் கட்சியும் ஏற்கனவே ஒரு தீர்வு யோசனையை அரசமைப்புக் குழுவுக்கு சமர்ப்பித்திருந்தது. அதனை மீறி தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு, தமிழரசுக் கட்சி தயாராக இருக்கிறதா? அதற்கு வாய்ப்புகள் குறைவு.

இப்போதைய சூழலில், புதிய அரசமைப்புக்கான யோசனையை முன்வைப்பதில் இரண்டு முக்கியமான தடைக்கற்கள் இருக்கின்றன.

ஒன்று, தமிழரசு கட்சிக்குள் இருக்கின்ற முரண்பாடு.

இன்னொன்று, அனைவருக்கும் பொதுவான, அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு யோசனையை உருவாக்குவது. இந்த இரண்டு தடைகளையும் தாண்டினால் தான், புதிய அரசமைப்புக்கான முயற்சிகள் தொடங்கும்போது, தமிழர் தரப்பினால் ஒருங்கிணைந்து செயற்பட முடியும்.

ஆனால், இதற்கான பிரதான சவால் தமிழரசுக் கட்சியில் இருக்கிறது.

ஏனென்றால் அந்தக் கட்சிக்குள் இப்போது மாறி மாறி குழப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. நீதிமன்றத்திலும் வழக்குகள் இருக்கின்றன.

இன்னமும் புதிய வழக்குகள் போடப்படுவதற்கான சாத்தியங்களும் இருக்கின்றன.

இதற்குப் பிரதான காரணம் தமிழரசு கட்சி இப்பொழுது இரண்டாகப் பிளவுபட்டு நிற்கிறது.

ஒரு தரப்பு சிறீதரன், மாவை சேனாதிராஜா போன்றோரை உள்ளடக்கியது. இன்னொரு தரப்பு சுமந்திரன், சத்தியலிங்கம், சி.வி.கே. சிவஞானம் போன்றோரை உள்ளடக்கியது.

சுமந்திரன் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எவ்வாறு உடைத்து பலவீனப்படுத்தினாரோ, அதேபோல, தமிழரசுக் கட்சிக்குள் தனது பிடியை வலுப்படுத்தக்கூடிய அளவிற்கு காரியங்களை ஆற்றியிருக்கிறார்.

அதன்விளைவாக, கட்சியின் மூத்த தலைவர்கள் பலர் அவரது வலைக்குள் விழுந்திருக்கின்றனர். அவர்களால் அதில் இருந்து வெளியே வர முடியவில்லை.

இவர்களை மீறி சிறீதரன் தரப்பினராலோ மாவை சேனாதிராஜாவினாலோ, எதையும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

கடைசியாக நடந்த நிர்வாக தெரிவில், சிறீதரன் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டிருந்தாலும், கட்சிக்குள் அவரால் ஒற்றுமையை நிலை நாட்ட முடியவில்லை.

அதைவிட, அவர் தலைவராகப் பொறுப்பேற்க முடியாத அளவிற்கு, நீதிமன்றத் தடை உத்தரவு இருக்கிறது.

இப்பொழுது உள்ள பிரச்சினை, யாருடைய கையில் தமிழரசுக் கட்சி இருக்கப் போகிறது என்பதுதான்.

இப்போதுள்ள நிலையில் சுமந்திரன் தரப்பே வலுவானதாக இருக்கிறது.

இப்படியான சூழலில் சிறீதரன் கஜேந்திரகுமாருடன் நடத்திய சந்திப்பை, அந்தக் கட்சியினர் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் அதற்கான வாய்ப்புகள் இல்லை என்றே தெரிகிறது.

ஏனென்றால், கஜேந்திரகுமாருக்கும் சிறீதரனுக்கும் இடையில் நடந்த சந்திப்பு, தனிப்பட்ட சந்திப்பாக இருக்கலாம் என்றும் கட்சி அதற்கு அங்கீகாரமோ

தொடர்ச்சி 08ஆம் பக்கம்


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

Vlambaram - January 15, 2025.qxp_Vlambaram-Front 2025-01-15 1:55 PM Page 7



# மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம்

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் சரித்திரப் பிரசித்தி பெற்றது. மாருதப்புர வீகவல்லியின் குதிரை முகம் மாறி மானிட முகம் அருளிய திருத்தலமாகும். இது இலங்கையின் வடபகுதியில் மாவிட்டபுரம் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. மாருதப்புரவீகவல்லி சோழ மண்டலத்தை ஆண்ட திசையுக்கிரசிங்க மன்னனின் மகள்.

இந்த ஆலயம்பற்றித் தினத்தந்தியில் வந்த கட்டுரை - இலங்கை யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள, மாவிட்டபுரம் கந்தசாமி திருக்கோவில்.

இலங்கை நாட்டின் புகழ்பெற்ற பழம் பெரும் கந்தன் ஆலயம், நகுல முனிவருக்கு கீரியின் முகம் நீக்கியருளிய தீர்த்தம் இருக்கும் கோவில், சோழர், பாண்டியர் என பல்வேறு மன்னர்களும் போற்றி வழிபட்ட கோவில் எனப் பல்வேறு சிறப்புகளைப் பெற்று விளங்குகிறது இலங்கை யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள, மாவிட்டபுரம் கந்தசாமி திருக்கோவில்.

மாவிட்டபுரம் என்பதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. மா+விட்ட+புரம் எனப் பிரித்துப் பொருள் கொண்டால், மாமர வடிவிலான அசுரனை சம்ஹாரம் செய்து, அவ்வடிவம் நீங்கிய தலம் என்று பொருள் கொள்ளலாம். மற்றொன்று, மாருதப்புரவீகவல்லியின் மா - குதிரை/பெருநோய், விட்ட - நீங்கிய, புரம் - தலம் என்பதால் மாவிட்டபுரமானதாக மற்றொரு காரணம் கூறப்படுகிறது.

**தலபுராணம்**-சோழமன்னனின் மகளாகப் பிறந்தவள் மாருதப்புரவீகவல்லி. பேரழகு மிகுந்த இவளைச் சீராட்டி, பாராட்டி வளர்த்தனர். ஆனால், முற்பிறவியில் அயக்கிரீவ முனிவரின் சாபத்தால் குன்ம நோயும், குதிரை முகமும் தோன்றி இளவரசியை வாட்டியது. இக்குறை தீர சோழ, பாண்டிய, சேரநாட்டு திருத் தலங்கள் பலவற்றிலும் நீராடி இறைவனை வழிபட்டு வந்தாள். தல யாத்திரையின் போது பேரூர் ஆதீன முதல்வரான சாந்தலிங்க முனிவரைத் தரிசனம் செய்தாள். முனிவர் அவளிடம், இலங்கை நாட்டில் அமைந்துள்ள நகுலேச்சரம் என்ற தலத் தீர்த்தமான கண்டகித் தீர்த்தத்தில் நீராடினால் சாபம் முழுவதும் நீங்கும் என்றார்.

அதன்படியே கதிர்காமம் தீர்த்தம் முடித்து, நகுலேச்சரம் வந்து நகுல முனிவரைச் சந்தித்தாள். எனக்கு ஏற்பட்ட கீரிமுகம், இத்தலத்தில் நீராடிய பிறகே நல்லமுகம் கிடைத்தது. அதேபோல் நளன், அர்ச்சுனன் முதலானோர் நலம் பெற்றதைக் கூறி, இத்தலத்துத் தீர்த்தத்தில் நீராடி வழிபட நகுல முனிவர் அறிவுரை கூறினார். அதன்படியே நீராடி, கந்தனை வணங்கி வழிபட்டு வந்த அவளுக்கு, நோய் நீங்கி, இயல்பான அழகு முகம் கிடைத்தது. இச்செய்தி நாடெங்கும் பரவியது. அது முதல் இத்தலம் துரகானன விமோசனபுரி என்று வடமொழியிலும், மாவிட்டபுரம் என தமிழிலும் அழைக்கப்பட்டது.



தன் மகளின் நோய் தீர்த்த இறைவனுக்கு கோவில் கட்ட மன்னன் முயற்சி செய்தான். அதன்படியே மிகப் பெரிய ஆலயம் எழுப்பப்பட்டு வந்தது. எம்பெருமானால் திருவுளப்படி தில்லை மூவாயரவருள் ஒருவரான பெரிய மனத்துளார் என்பவரை இலங்கைக்கு அனுப்பி வைத்தனர். இந்தியாவில் இருந்து கந்தசாமியின் விக்கிரகம், இலங்கைத் துறைமுகம் வந்து இறங்கியது. இதுவே காங்கேயன் துறைமுகம் எனத் தற்போது அழைக்கப்படுகிறது.

இத்தலத்தில் மாருதப்புரவீகவல்லிமீது காதல் கொண்ட உக்கிரசிங்கசேனன், இளவரசியின் தந்தையிடம் அனுமதி பெற்று, கோவில் திருப்பணி முடிந்தபிறகு, மணம் புரியச் சம்மதித்தான். அதன்படி, மாவிட்டபுரம் கந்தன் ஆலயம் வெகு நேர்த்தியாகக் கட்டி முடிக்கப்பட்டு, குடமுழுக்கு சிறப்பாக நடத்தி, ஆலய நிர்வாகத்தை தீட்சிதரிடம் ஒப்படைத்தனர். ஆலய நிர்வாகத் தீட்சிதர் பரம்பரை, குறைவின்றி நிர்வாகம் செய்து வந்தது.

இளவரசி மாருதப்புரவீகவல்லி, உக்கிர சிங்கசேனனின் பட்டத்தரசியானாள். இதன்பிறகு, போர்ச்சுகீசியர்களுக்கும், பகைமை கொண்ட நாட்டு மக்கள் சிலரா லும், உள்நாட்டு யுத்தம் காரணமாகவும் பல்வேறு இன்னல்களை அனுபவித்தது இவ்வாலயம்.

1996இல் இவ்வாலயத்தின் புனரமைப்புப் பணி மீண்டும் தொடங்கியது. 2011இல் இருந்து மக்கள் வழிபடத் தொடங்கினர். திருப்பணி இன்னமும் நடைபெற்று வருகிறது. மக்களும் மெல்ல மெல்ல இயல்பு நிலைக்குத் திரும்பி வருகின்றனர்.

**ஆலய அமைப்பு**-ஆலயம் நான்கு திசைகளிலும் வாயில்களைக் கொண்டிருந் தாலும், கிழக்கு, மேற்கு, தெற்கு வாசல்கள் மட்டுமே தற்போது பயன் பாட்டில் உள்ளன. மேற்கு வாசலில் 80 அடி உயர ராஜகோபுரம் கலைநயத்துடன் விண்ணை முட்டி நிற்கின்றது. அருகே வேட்டை மண்டபம் அமைந்துள்ளது. நான்கு மாடவீதிகள் விளங்க, மூன்று பிரகாரங்களுடன் ஆலயம் அமைந்துள்ளது.

ஆலயம், வில்லு மண்டபம், தட்டி மண்டபம், ராஜகோபுரம், வசந்த மண்டபம், துவார கோபுரம், ஸ்தம்ப மண்டபம், ஸ்நபன மண்டபம், மகா மண்டபம் அந்தராள மண்டபம், அர்த்த மண்டபம், கருவறை ஆகியவையும் முறைப்படி கட்டப்பட்டுள்ளன. இளவரசியின் குதிரை முகம் மற்றும் அழகு முகம் கொண்ட சிலைகள், சிற்பங்கள் நிறைந்த ஸ்நபன மண்டபத்தில் அமைந்துள்ளது.

ஆலயத்தில் விநாயகர், சந்தானகோபாலர், மகாலட்சுமி, சிதம்பரேஸ்வரி சமேத சிதம்பரேஸ்வரர், தண்டாயுதபாணி, வைரவர், நவக்கிரகங்கள், நாகராஜர், சண்முகர், முத்துக்குமாரசுவாமி, சுப்பிர மணியர், சந்திரசேகரர், மாயூரர் ஆகியவை ஒருங்கே அமைந்துள்ளன.

இவற்றிற்கெல்லாம் நடுநாயகமாக மாவைக்கந்தன் வள்ளி தெய்வானை சமேத கந்தசாமியாக நின்ற கோலத்தில் அருள் வழங்குகின்றார். இவர்களின் பின்புறம் காவலாக, மயில் அழகுறக் காட்சி தருகின்றது. இந்த வடிவம் சோழர் காலத்தைச் சார்ந்தது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இவ்வாலயத்தில் மாருதப்புரவீகவல்லி வழிபட்ட செம்புவேல், சிவலிங்கம், தான் தோன்றி விநாயகர் மூன்றுமே இன்றும் காட்சி தருகின்றன. முதல் மரியாதை இவர்களுக்குச் செய்த பிறகே பிற தெய்வங் களுக்குப் பூஜைகள் நடத்தப்படுகின்றன.

**விழாக்கள்**-ஆடி அமாவாசையில் கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடை பெறுவது இத்தலத்தின் தனிச் சிறப்பு. தைப்பூசம் லட்சார்ச்சனை, ஆனி, ஆடியில் 25 நாட்கள் பிரம்மோற்சவம், அலங்காரத் திருவிழாவாக நடைபெறு கிறது. இவ்விழாவில் இலங்கையின் அனைத்துப் பகுதியில் இருந்தும் பல்லாயி ரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்வது வழக்கமாக உள்ளது. இதுதவிர, ஐப்பசி சுக்கிர வாரம், நவராத்திரி, கந்தசஷ்டி விழா, கார்த்திகை தீபம், கார்த்திகை சோமவாரம், மார்கழித் திருவெம்பாவை என விழாக்கள் குறைவின்றி நடைபெறுகின்றன.



இவ்வாலயம் மாவை ஆதீனம் வாயிலாக சிறப்புடன் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. கி.பி. 789ஆம் ஆண்டில் பெரியமனத் துளார் என்ற தீட்சிதரால் தொடங்கப்பட்ட ஆலயம். இன்று 39ஆவது ஆதீனமாக ரத்தினசபாபதி குருக்கள் நிர்வாகம் செய்து வருகிறார்.

ஆறுகாலப் பூஜை நடைபெறும் இவ் ஆலயத்தை, காலை 6:00 மணி முதல் இரவு 7:30 மணிவரையிலும் தொடர்ச்சி யாகத் தரிசனம் செய்யலாம். பூஜைகள் அனைத்தும் குமார தந்திரப்படி மேற் கொள்ளப்படுகிறது.

**தலமரம்**-காஞ்சிபுரத்தில் இருந்து கொண்டு வந்த மாமரமே தலமரமாகும். தலத் தீர்த்தம் கண்டகித் தீர்த்தம் என்னும் இந்து மகா சமுத்திரம் ஆகும். இது சிவபெருமானால், பார்வதியின் குளியலுக் காக உருவாக்கப்பட்ட புண்ணிய தீர்த்தம் ஆகும். இது யுகங்களைக் கடந்து, கலியுகத்திலும் தன் அருளையும், சக்தியையும் தொடர்ந்து வழங்கி வருகிறது. இத்தீர்த்தத்தில் நீராடிய பிறகே, மாருதப்புரவீகவல்லியின் நோயும், குதிரை முகமும் குணம் பெற்றது.

**பரிகாரத் தலம்**-மாவைக் கந்தன் எவ்வித வேண்டுதலையும் நிறைவேற்றித் தரும் வள்ளலாக விளங்குகின்றான். வேண்டுதலுடன் வருபவர், கண்டகி தீர்த்தத்தில் நீராடி, நகுலேசுவரரை வழிபட்டு, மாவைக் கந்தனிடம் வந்து மனமுருகிப் பிரார்த்திக்க வேண்டும். வேண்டுதலை ஓராண்டுக்குள் நிறைவேற்றித் தருவது மாவைக் கந்தனின் வழக்கம் என்பது பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக அமைந்துள்ளது.

**அமைவிடம்**-மாவிட்டபுரம் திருத்தலம் இலங்கை நாட்டின் வடபகுதியான

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville

Mr.S.F.Xavier (Teacher)
Contact: 647.340 .9490 / 416.732.2228

Vlambaram - January 15, 2025.qxp_Vlambaram-Front 2025-01-15 1:55 PM Page 8



# நாமும் நமது இல்லமும் 670



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடிய ஆதன வியாபாரம் கடந்த வருடத்தில் (2024), சில நல்ல செய்திகளுடன் முடிவடைந்துள்ளது. இதற்கு முக்கிய காரணமாக, வட்டி வீத இறக்கத்தைக் கொள்ளலாம்.

2024ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கனடிய வட்டி வீதம் 5%ஆகக் காணப்பட்டது. வருடக் கடைசியில் அதாவது ஜனவரி 2025இல் இந்தப் பெறுமதி 3.25%ஆகக் குறைந்துள்ளது. அதாவது, 1.75%இனால் குறைவடைந்தது. அத்துடன் கனடிய மத்திய அரசு பல விதமான சலுகைகளை முதல் தடவை ஆதனம் வாங்குவோரிற்குக் கொடுத்துள்ளது.

அத்துடன் பதவியில் இருந்த பிரதம மந்திரி ஜஸ்ரின் ரூடோ, தனது பதவி விலகுகிறார். இதனால் மக்கள் தம் வாழ்வில் சிறப்பு ஏற்படும் என எதிர்பார்க்கின்றனர்?

ஏற்கனவே ஆதன விலையின் அதீத அதிகரிப்பிற்குக் குறைந்தளவிலான ஆதனங்கள் உருவாக்கப்பட்டதே காரணமாகும். பிரிட்டிஷ் கொலம்பியா (British Columbia) போன்ற கனடிய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது, ஒன்ராறியோவில் ஆதனம் உருவாக்குவதற்குப் பல நெருக்கடிகள் காணப்படுகின்றது. உள்ளூராட்சியின் மிக இறுக்கமான கொள்கைகள், அதிகளவிலான வரிகள், புதிய தொகுதிகளிற்குரிய அதிகளவிலான பணச்சுமை (Development Fee) இதனால் புதிதாக நிர்மாணம் செய்வதனை பல நிர்மாணம் நிறுவனங்கள் தவிர்க்கின்றன. கடந்த நான்கு வருடத்தில் 100,000 ஒன்ராறியோ மக்கள் கனடாவின் மற்றைய மாகாணங்களிற்கு இடம் பெயர்ந்துள்ளனர். இந்நிலைமை ஒன்ராறியோவிற்கு சிறப்பல்ல.

கனடிய வட்டிவீதத்தை நோக்கிய பார்வையில், பின்னோக்கி சென்றால், 1980களின் ஆரம்பத்தில் ஏறக்குறைய 20%இற்கு அண்மையில் வட்டிவீதம் காணப்பட்டது.

இதே வட்டிவீதம் 2020-2021களில் ஏறக்குறைய பூச்சியத்தை (0.25%) அடைந்தது (கொரோனா தொற்று காலம்). இதுவே ஆதனநிலையை உச்சத்திற்கு உயர்த்திய காலமாகும்.

ஏற்கனவே 1980களின் இறுதிப்பகுதியில் (1989) ஆதனவிலை உச்சத்தை அடைந்திருந்தது, பின்பு 1990களில் விலை இறக்கத்திலேயே இருந்தது. இது ஒரு நீண்டகால இறக்கமாகக் காணப்பட்டது.

ஆண்டு 2000களில் வட்டிவீத இறக்கத்துடன் ஆதன விலை சிறிது சிறிதாக மேல்நோக்கிச் சென்றது. பொருளாதார சுருக்கத்தால் (Recession) 2008-2009இல் மீண்டும் விலை இறக்கம் வட்டிவீதத்தைக் குறைத்து அன்றைய நிதி அமைச்சரும் மத்திய வங்கி ஆளுநர் மார்க் காணி (Mark Carney) இவர்களின் கூட்டுமுயற்சி, ஆதன வளர்ச்சிக்கு மீண்டும் உரம் போடப்பட்டது. 2016-2017களில் மீண்டும் ஆதனவிலை



உச்ச நிலை விலை ஏற்றத்தைத் தடுக்க அரசு, மத்திய வங்கி புதிய தடுப்புகளை போட்டது. ஆதனவிலை மீண்டும் இறங்கத் தொடங்கியது.

தொடர்ந்து கொரோனா தொற்றுக்காலம் வட்டிவீதம் பூச்சியத்தை நெருங்கியது. பெருமளவிலான முதலீட்டாளர்கள் குறுகிய காலத்தில் பணம் உழைக்க, ஆதனத்தை வியாபாரமாகக் கையில் எடுத்தனர். பணவீக்கம் உச்சத்தை தொட்டது. பணவீக்கத்தை கட்டுப்படுத்த மத்திய வங்கி வட்டிவீதத்தை 2022 இலிருந்து தொடர்ந்து அதிகரித்து வந்தது. ஆரம்பமாக 0.25%இலிருந்து 5%வரை உயர்த்தியது. ஆதனம் கொள்வனவு செய்தவர்களின் நிலைமை மோசம் அடைந்தது. மாதாந்தக் கொடுப்பனவை செலுத்துவதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. ஆதனம் வாங்கிய பலர் தமது ஆதனத்தை பெற்றுக் கொள்வதற்கு அடமானக் கடன் பெறுவதில் ஏற்பட்ட நெருக்கடி, ஆதனத்தை கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால், ஆதன விலையிலும், வியாபாரத்திலும் 2022இன், இரண்டாவது காலாண்டில் இருந்து 2024 ஆண்டுவரை இந்நிலைமை தொடர்ந்தது.

2022இற்கு முன்னர் குறைந்த வட்டி வீதத்தில் ஆதனத்தைக் கொள்வனவு செய்து 5 வருட மாறாத (Closed Mortgage) வட்டிவீதத்தை 2% குறைவாக பெற்றவர்களில் பெரும்பகுதியினர் இந்த வருடம் (2025) புதிய அடமானக்கடன் வட்டிவீதத்தை (Mortgage Renewal) பெற வேண்டிய நிலையில் உள்ளது. இக் காலத்தில் வட்டிவீதம் 4%இற்கு மேலாகக் காணப்படுகின்றது.

எனவே இவர்களின் மாதாந்தக் கொடுப்பனவு ஏறக்குறைய இரு மடங்காக மாறக்கூடிய சந்தர்ப்பங்களே அதிகம். இவர்கள் எவ்வாறு சமாளிப்பார்கள் என்பது புதிய நிலைமை.

இன்றும் பலர் தமது தொழிலை இழந்து வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. அமெரிக்காவின் புதிய அதிபரின் (Donald Trump) புதிய பொருளாதாரக் கொள்கை கனடாவின் தொழில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்றே பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

கனடாவிற்குப் புதிதாகப் பதவியேற்க இருக்கும் பிரதம மந்திரியின் வெளிநாட்டுப் பொருளாதாரக் கொள்கைகள் எவ்வாறு இருக்கும் என்பதில், பெரிய பகுதி அடங்கியுள்ளது.

அண்மைக்காலமாக (கடந்தஆண்டுகளுக்கு மேலாக) அதிகளவு புதியவர்களின் வருகையும் உள்நாட்டவர்களில் தொழில் பெறும் முறையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கனடிய டொலரின் குறைந்த மதிப்பு, ஏற்றுமதி செய்வோரிற்கு சார்பாக இருந்தாலும், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களின் விலை அதிகரிப்பு மக்களின் வாழ்க்கைச் செலவை மிகவும் அதிகரித்துள்ளது.

கனடிய மத்திய வர்க்கத்திற்கு இதனால் பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் சேமிப்பு என்பது இல்லாமல் காலம் செல்வதனைக் காணலாம்.

ஆரம்ப முதலீடு 5%ஆக இருந்தாலும் இதனை சேமிப்பது இலகுவானது கிடையாது.

புதிதாக கனடாவிற்கு வந்து ஆதனம் வாங்குபவர்களின் நிலைமையும் இறுக்கமாகவே உள்ளது.

பலவிதமான நெருக்கடிகளிற்கிடையே 2025 ஆண்டு தொடங்கியுள்ளது. எனினும் வட்டி வீத இறக்கம் என்பது தொடரலாம் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது.

வாழ்வதற்கு ஆதனம் என்பது தேவையானதே. இதனை தவிர்க்க முடியாது வாடகையா, சொந்தமானதா என்பது தனிப்பட்டவர்களின் முடிவு.

## தடுமாறும்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

அனுமதியோ வழங்கவில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கூறியிருக்கிறார்.

இது கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரான சிறீதரனை அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ஓரம்கட்ட நினைக்கிறார், ஒதுக்கித் தள்ள நினைக்கிறார் என்பதைப் புலப்படுத்துகிறது.

சாணக்கியனைக் கையாளுவது சுமந்திரன். அதுபோல இன்னும் பலரை அவர் கையாளுகிறார்.

அவர்கள் சிறீதரனுக்கு எதிராக செயற்படுகின்றனர் என்பது பகிரங்கமாகத் தெரிகிறது.

இதனைத் தாண்டி தமிழரசுக் கட்சியினால் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் ஆதரவளிக்க முடியுமா என்பது சந்தேகம்.

இந்த விடயத்தில் சிறீதரனும் கஜேந்திர குமாரும், தற்போதைய பிரச்சினைகளில் இருந்து மக்களை தமது பக்கம் கவருவதற்காக, இந்த முயற்சிகளை முன்னெடுக்கின்றனர் என்ற விமர்சனங்களும், சிலரிடமிருந்து வருகின்றன.

தமிழர் தரப்பு ஏதாவது ஒரு முன்னகர்வை மேற்கொள்ளும்போது, இழுத்து விழுத்தும் பழக்கம் தமிழருக்கு நிறையவே உள்ளது. இந்த விடயத்திலும் அவ்வாறுதான் நடந்து கொண்டிருக்கிறது.

மற்றொரு பக்கத்தில் இதனைத் தாண்டி புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கு எல்லாக் கட்சிகளும் இணங்கி வந்தால், அந்தத் தீர்வு யோசனை - தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டத்தை முன்னிறுத்தியதா அல்லது தமிழரசுக் கட்சியின் யோசனையை முன்னிறுத்தியதா அல்லது தமிழ்த் தேசியக் கட்சி இப்போது முன்வைக்கும் சுயாட்சியை மையப் படுத்தியதா என்ற குழப்பங்கள் உருவாகும்.

இந்தக் குழப்பங்களைத் தாண்டித்தான், புதிய அரசமைப்பு யோசனையைத் தயாரிக்க வேண்டும்.

3 Bedrooms house & 2 Bed rooms bsmt for rent. Close to Costco & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**647.764.5246**

## HOUSE FOR RENT
**NEILSON & FINCH**
3 Bedrooms & 1.5 washroom bangalow house main floor for rent. 2 Parking. 24 hrs. bus service. Wifi included. Walking distance to Eraa supermarket. Avail. Feb. 01, 2025.
**416.456.1031/416.299.3919**

## ROOM FOR RENT
**MORNINGSIDE & STAINES**
2 Bedroom for rent in a main floor. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**647.888.9437**

## HOUSE / ROOM FOR RENT
**MARKHAM & DENISON**
4 Bedrooms /Rooms for rent. 5 Min. walk to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.897.3195**

## CONDO. TOWN HOUSE SALE/RENT
**MCLEVIN & TAPSCOTT**
1 Bedroom + Den & 1.5 washroom Brand new Condo. town house for Sale/rent. Good for Couple. Close to access the bus & all facilities. Avail. February 01, 2025.
தொடர்புகளுக்கு: **416.831.3784**

## HOUSE FOR RENT
**MORNINGSIDE &ELLESMERE**
3 Bedrooms & 1 washroom main floor for rent. 2 Parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 416.271.5420**

## CONDO. FOR RENT
**HWY 7 & JANE ST.**
**2916 HWY 7 -**1 Bedroom + Den condo. for rent. 2 full washroom, Rent -$2,600. 675 Sq.Ft. Locker & Par king. 5 Min. to Vaughan Metro politan Centre. Avail. Feb. 01, 2025.
தொடர்புகளுக்கு: **647.772.6282**

## HOUSE/BASEMENT FOR RENT
**LAWRENCE & SCAR. GOLF. CLUB**
3 Bedrooms & 2 washrooms house for rent. 2 Bedrooms & 1 washroom house for rent. 2 Bedrooms bsmt for rent. All Sep. entrance. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.897.8067**

## CONDO. FOR RENT
**BRIMLEY & ELLESMERE**
2 Bedrooms & 2 full washrooms condo. for rent. 1 parking. Close to Scar. town centre & all facili ties. Avail. January 23, 2025.
**613.769.3432/416.454.4149**

## HOUSE FOR RENT
**WARDEN & HWY 401**
3 Bedrooms & 1 washroom house for rent. 2 Parking.1Min. walk to bus stop. Close to all facilities. Avail. March 01, 2025
**416.414.0439/647.740.8181**

## CONDO. FOR RENT
**MARKHAM & DENISON**
**7400 MARKHAM RD -** 3 Bed rooms & 2 full washrooms condo. for rent. Rent -$2,650. 1 Parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.558.2228**

## HOUSE/BASEMENT FOR RENT
**MEADOWVALE & ELLESMERE**
Side split 3. 4 Bedrooms (1 in Main, 3 in bsmt), 2 Washrooms, Kitchen, Living Room & Separate laundry. Close to UofT, Centennial College, TTC & LRT Bus Stop.
**Contact: Thinesh @ 416.871.2475**

## HOUSE FOR RENT
**ELLESMERE & ORTON PARK**
4 Bedrooms house & 2 bedroom bsmt full house for rent. 3 full wash room. 7 Parking. Close to bus,school & all facilities. Seniors preferred. Food, PSW & Nurse facility available.
தொடர்புகளுக்கு**: 416.206.5080**

## HOUSE FOR RENT
**MARKHAM & HWY 7**
3 Bedrooms bungalow house for rent. Close to all facilities. Avail. February 01, 2025.
தொடர்புகளுக்கு:**647.883.1054**

## ROOM FOR RENT
**MARKHAM & DENISON**
2 Rooms available in main floor. Close to all facilities. Ladies only. Avail. immediately.
**647.858.2290 /647.534.9897**

## BASEMENT & ROOM FOR RENT
**CHURCH & KINGSTON (AJAX)**
2 Bedrooms bsmt for rent. 2 Bed rooms for rent in upstairs. Parking available. Close to TTC & all facilities. No pets & no smoking. Avail. immediately.
**647.869.1252/ 416.844.9102**

## CONDO. FOR RENT
**KENNEDY & HWY 401**
**K Square Condo.** - 1 Bedroom + Den condo. for rent. Close to Kennedy commons plaza. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.774.7068**
**Email:karuna.sritharan@yahoo.com**

## HOUSE FOR RENT
**MCCOWAN & BRIMORTON**
3 Bedrooms house for rent. 2 parking. Close to Scar. centre, Mall & all facilities. 2 Min. walk to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**647.856.0250**

## ROOM FOR RENT
**SCAR.GOLF CLUB & LAWRENCE**
Room for rent. Parking available. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.454.9986**

## HOUSE/BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
4 Bedrooms house for rent.
**STAINES&MORNINGSIDE**
2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## HOUSE FOR RENT
**WHITES & TAUNTON**
3 Bedrooms & 2.5 washrooms house for rent. 5 Min. walk to bus stop. School bus facilities available. Avail. immediately.
**647.535.9630/416.887.8905**

## HOUSE FOR RENT
**MARKHAM & SHEPPARD**
2 Bedrooms & 2 washrooms Two-story Townhouse for rent. Parking, laundry. Close to all major supermarkets, 24Hr Bus with 1 minute walk. No pet or smoke.
தொடர்புகளுக்கு**: 416.477.8746**

## HOUSE & CONDO. FOR RENT
**BROCK & TAUNTON (PICKERING) -** 4 Bedrooms & 4 washrooms brand new house for rent.
**MONINGSIDE & FINCH -** 4 Bedrooms & 3 washrooms house for rent.
**PHARMACY & SHEPPARD (SCARBOROUGH)-** 2 Bedrooms & 2 washrooms brand new condo. for rent.
**Please call or text - 647.269.0193**

## ROOM FOR RENT
**KENNEDY & LAWRENCE**
1 Bedroom for rent in a 2 bedrooms bsmt. Sep. entrance, sep. laundry & 1 parking. Ladies only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 416.219.6062**

## ROOM FOR RENT
**SIMCOE & RITSON**
**OSHAWA -** 1 Bedroom for rent in a house. parking. Close to bus stop, University & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 647.857.1292**

Vlambaram - January 15, 2025.qxp_Vlambaram-Front 2025-01-15 1:55 PM Page 16



## HOUSE KEEPER WANTED

Waterloo பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தமிழ் தம்பதிகளை வீட்டிலிருந்து பராமரிப்பதற்கும் சமையல் செய்வதற்கும் அனுபவமுள்ள ஒருவர் தேவை.

Please call: **+1.519.500.0487**

## COOK WANTED

**KEELE & DUNDAS**இல் அமைந்துள்ள **SPORTS BAR** ஒன்றிற்குஅனுபவ முள்ள **COOK** தேவை.

**416.889.3191/647.667.0482**

## நியூ ரங்கனாஸ் நகைமாடம்



CASH FOR GOLD

* திருமணத்திற்கான தாலிக்கொடி, மற்றும் அனைத்து நகைகளையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள

* தங்கநகை அடகுச் சேவை.

* பழைய தங்கநகைகள் விற்பனை

மேலதிக விபரங்களுக்கு **647.702.2159**

நியூ ரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸ்ரீல்ஸ்

## பலகாரத் தேவைகளுக்கு

ரவை லட்டு, கேசரி, தொதல், அரியதரம், பயத்தம் பலகாரம் போன்ற பலகார வகைத் தேவைகளுக்கு

அழையுங்கள்:**647.765.2250**

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் சுன்னாகத்திற்கும் ஏழாலைக்கும் இடையில் 10 பரப்பு உறுதிக்காணி பழைய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. 20 நிமிடத்தில் பலாலி விமான நிலையம். வீதியோரத்தில் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:**905.904.9616**

## முதியோர் பராமரிப்பு

**MARKHAM & STEELES**

பகுதியில் உள்ள வீட்டில் முதியோருக்கு இருப்பிடமும் உணவும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **647.761.7568**

## CASHIER (காசாளர்) WANTED

Markham பகுதியிலுள்ள தமிழ் Restaurant ஒன்றிற்கு காசாளர்கள் (Cashier) (4பேர்) தேவை. முன் அனுபவமுள்ள பெண்கள் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: **Raj - 416.999.3878**

## JOB VACANCY

**OFFICE ADMINISTRATOR /RECRUITERS**

**LOCATION - SCARBOROUGH/BRAMPTON** (Full time / Part time)

**Requirement - University Degree in Canada with Institutional experience & excellent communication skills in English & Tamil**

If you're interested, please contact for more details.

**416.918.9848 /416.857.7603**

## சமையல் வேலைக்கு ஆள் தேவை

Markham பகுதியிலுள்ள தமிழ் Restaurant ஒன்றிற்கு அப்பம், தோசை, இட்லி, வடை, ரோல்ஸ் போன்ற உணவுகளைத் தயாரிப்பதில் முன் அனுபவமுள்ள சமையல் ஆட்கள் உடனடியாகத் தேவை. இருபாலாரும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: **Raj - 416.999.3878**

## UPCOMING CONDO. FOR SALE

**MARKHAM & BRIMORTON**

புதிதாக அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் 3 Bedrooms & 2 Bedrooms Luxury Condominium (2) (FOURME) விற்பனைக்கு உண்டு. Closing: December, 2025.

மேலதிக தொடர்புகளுக்கு **: 905.904.9616**

### மகாஜனா கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா 17வது ஆண்டு மகாஜனன் போட்டியை அறிவிக்கிறது

டொராண்டோ, கனடா - ஜனவரி 1, 2025 – மகாஜனா கல்லூரி பழைய மாணவர் சங்கம் (OSA) - கனடா, 17வது ஆண்டு மகாஜனன் போட்டியை 2025 மார்ச் 2, ஞாயிற்றுக்கிழமை நடத்த இருப்பதை அறிவிக்க மகிழ்ச்சியடைகிறது. இந்தப் பிரசித்தி பெற்ற போட்டி, 1 முதல் 11ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களை இலக்கு வைத்து, கணிதம் மற்றும் பொது அறிவு துறைகளில் கவனம் செலுத்துகிறது. நிகழ்வு விவரங்கள்:

- தேதி: 2025 மார்ச் 2, ஞாயிற்றுக்கிழமை
- பாடங்கள்: கணிதம், பொது அறிவு
- தகுதியான வகுப்புகள்: 1 முதல் 11
- பதிவு துவக்கம்: 2025 ஜனவரி 1
- முன்னணி பத்து போட்டியாளர்களுக்கு பரிசுகள்:

** மடிக்கணினிகள் ** பதக்கங்கள் ** சான்றிதழ்கள்

மகாஜனா கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா, ஆண்டுதோறும் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்கிறது, இது இளம் மனங்களை அறிவு முயற்சிகளில் ஈடுபடுத்துவதுதில் சிறந்த வரலாற்றைக் கொண்டுள்ளது.

பங்கேற்பாளர்களின், கணிதம் மற்றும் பொது அறிவு துறைகளில் திறமைகளை மதிப்பீடு செய்யப்பட்டு முன்னணி வெற்றியாளர்களுக்கு மடிக்கணினிகள், பதக்கங்கள், சான்றிதழ்கள் உள்ளிட்ட மதிப்புமிக்க பரிசுகளைப் பெறுவார்கள். இந்த முயற்சி, மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கவும், வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கு ஆர்வம் வளர்க்கவும் ஊக்குவிக்கிறது.

போட்டிக்கான பதிவு 2025 ஜனவரி 1 முதல் துவங்குகிறது. ஆர்வமுள்ள பங்கேற்பாளர்கள், அதிகாரப்பூர்வ இணையதளமான www.mahajana.ca மூலம் பதிவு செய்யலாம்.

மகாஜனா கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா, கல்வி வாய்ப்புகள் மற்றும் சமூக ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. மகாஜனன் போட்டி போன்ற நிகழ்வுகள் மூலம், சங்கம், பிராந்தியத்திலுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை தொடர்ந்து ஆதரிக்கிறது.

மேலும் விவரங்களுக்கு, தயவுசெய்து ஏற்பாட்டுக் குழுவை தொடர்பு கொள்ளவும். contest@mahajanan.org, 647.948.5502, www.mahajana.ca



WPM Property Management
Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

*Oshawa* -Hwy 2 / Trulls Rd - Bungalow (5Brm + 2Bath) [$3475/ month]

*Whitby* -Des Newman / Twin Streams -Full ( 3 Brm + 3 Bath + Parking) ($3500/month)

Oshawa - Upper floor Bond/Mcmillan ( 3 Brm + 1 Bath ) Separate entry and laundry ( $2950/month)

*Scarborough* - Morningside/Sheppard ( 2 Brm + 1 Bath ) ($1850/ month)

Niagara Falls - Lundy's Lane / Dorchester (4BR 3Bath $3200)

**Available for Rent**

*Oshawa* - Harmony/ Olive - Basement (1Brm + 1 Bath + 1 parking) [$1450.00/month including utilities)

*Scarborough* - Mccowan & Lawrence-Basement (2Brm + 1Bath) [$2,100/month)

*Whitby* - Country Lane & Southwell Ave Basement (2Brm + 1Bath) [$1600/month]

*Mississauga*-Confederation / Burnhamthorpe - Condo (1Brm + 1Bath) [$2300/month]

Scarborough - Morningside/Lawrence main floor(3 Bm + 1 Bath) ($2800)

**BUY / SELL/ LEASE / INVEST**

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

Real Estate & Property Management துறையில் 36 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.

கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

இலங்கையில் (Sri Lanka)
வீடு, காணி, வியாபார நிலையங்கள்
வாங்க விற்க தொடர்புகளுக்கு

Lanka Global Real Estate
170 Columbuthurai Rd
Jaffna
Email: sales@langaglobal.lk
Phone: 94-77-666-5513

கரு கந்தையா
[கனடா]
Phone:
1-416-616-7278

அரன் கந்தையா
[அவுஸ்திரேலியா]
Phone:
61-418-553-6613

# யாதும் யாவரும் – திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

யாதும் யாவரும் திரைப்படம் அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கைத் தமிழரால் எடுக்கப்பட்டது. 2023இல் வெளியான இப்படம் அண்மையில் தயாரிப்பாளரால் யூடியூப்பில் வெளியிடப்பட்டது.



இப்படத்தில் கண்மணி என்ற இளம் சட்டத்தரணி தனது தாயுடன் அவுஸ்ரேலியாவில் வாழ்ந்து வருகிறார். UKஇற்கு கணவருடன் புலம்பெயர்ந்த கண்மணியின் தாய், கணவருக்கு வேறு உறவு இருப்பதைக் கண்டுபிடித்ததால், அவரை விட்டுப் பிரிந்து அவுஸ்ரேலியாவில் தனியாக கண்மணியை வளர்த்து வருகிறார்.

கண்மணிக்கு வேலைமூலம் சுவிட்சர்லாந்திற்குச் செல்ல வாய்ப்புக் கிடைக்கிறது. இது மூன்று வருட வாய்ப்பு என்பதால் அவருக்குத் தாயை தனியாக விட்டு வெளிநாடு செல்ல விருப்பமில்லை.

இதற்குத் தீர்வாக தாய்க்கு ஒரு துணைவரைத் தேர்ந்தெடுக்க முடிவெடுக்கிறார். அத்தோடு கண்மணி தனது காதலனின் குடும்பத்தைச் சந்திக்க வேண்டிய தருணம் ஏற்படுகிறது. கண்மணிக்கும், தாய்க்கும் துணைவர்கள் சரியாக அமைவார்களா? என்ற கேள்விக்குப் பதிலை இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.



படத்தின் வடிவமைப்பு நன்றாக அமைந்துள்ளது. படக்காட்சிகளும், கதையும் மிகவும் தெளிவாக இருக்கின்றன. இப்படம் தாயும் மகளும் என இரு பெண் கதாபாத்திரங்களை முக்கியமாகக் கொண்டுள்ளமை மிகவும் சிறப்பான விடயமாகும். அத்தோடு, இந்தப் படம் புலம்பெயர் தமிழரால் எடுக்கப்பட்ட படம் என்பதால் கதாபாத்திரங்களும் மிகைப் படுத்தப்படாமல் சாதாரணமாக அமைந்துள்ளதும் படத்தில் ஒரு சிறப்பாகும்.

படத்தின் கருத்தான 'நவீன உறவுகள்' மிகத் தெளிவாகவும் இயல்பாகவும் படத்தில் கதைமூலம் உணர்த்தப்படுகிறது. ஆனால், இக்கருத்தை உணர்த்த அதிகளவு ஆங்கில வசனங்கள் தேவை என இயக்குநர் எண்ணியதுபோலத் தெரிகிறது. இது ஆங்கிலேயர்களுக்கான படம் போலத் தெரியவில்லை, அதாவது இது முழு ஆங்கில மொழிப்படம் இல்லை. அத்தோடு படத்தில் ஆங்கில மொழிபெயர்ப்பு (Subtitles) வழங்கப்பட்டிருக்கிறது. எனவே (புலம்பெயர்) தமிழருக்காக எடுக்கப்பட்ட இப்படத்தில் இயல்பாக, சூழ்நிலைக்கு ஏற்ப தமிழர் பாவிக்கப்படும் ஆங்கிலத்தைவிட அதிகமாக கதாபாத்திரங்கள் ஆங்கிலத்தில் கதைப்பது படத்தை செயற்கைத் தன்மையாக்குகிறது.

இது படத்திலிருந்து கவனத்தையும் சிதற வைக்கிறது. உதாரணமாக ஒரு காட்சியில் இலங்கையிலிருந்து புதிதாக இங்கிலாந்திற்கு வந்துள்ள இரு தமிழர் தமக்குள் வீட்டில் கதைக்கின்றனர். இவர்கள் ஆங்கிலத்தில் கதைக்கின்றனர். அதற்கு மேலாக, அவர்கள் பேசும் ஆங்கிலம் இலங்கையிலோ, இங்கிலாந்திலோ பேசப்படும் ஆங்கிலம் இல்லாமல், அவுஸ்ரேலியரின் ஆங்கிலமாக இருப்பது மிகவும் பொருத்தமற்றது. இப்பிரச்சனையைத் தவிர்க்க உரை தமிழில் இருந்திருக்கலாம். நடிகர்களுக்கு இலங்கைத் தமிழ் தெரியாவிட்டால் அவர்களுக்கு வேறு ஒருவர் குரல் (Dubbing) அளித்திருக்கலாம்.



பல்வேறு நாட்டவர்கள் தமது மொழிகளில் படம் எடுத்து, உலகளவில் ஆங்கில மொழிபெயர்ப்பு (Subtitles) மூலம் கொண்டு செல்லும் இக்காலத்தில், கருத்தை உணர்த்த ஆங்கில உரைகள் தேவையில்லை. புலம்பெயர் தமிழ் இளைஞர்கள் இந்தியத் தமிழ்ப் படங்களை ஆங்கில வசனங்களுடன் பார்த்துப் பழகியுள்ளனர்.

இதைத் தவிர, நல்ல கருத்துடன் நன்றாகத் தயாரிக்கப்பட்ட இப்படத்தை அனைவரும் பார்க்கலாம்.

Vlambaram - January 15, 2025.qxp_Vlambaram-Front 2025-01-15 1:55 PM Page 18



# வலிமை என்பது ஒரு வரப்பிரசாதம்



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

வலிமை என்பது ஒரு நற்பண்பு. வலிமை என்பது அச்சத்தை வெல்லவும், பொறுப்பற்ற தன்மையை தவிர்க்கவும், முயற்சிக்கும் பண்பாகும். எல்லா மனிதர்களுக்கும் இந்த நற்பண்பு கிடையாது. வலி இல்லை என்றால் வலிமை கிடையாது. வலிமை என்பது ஓர் உடல் மற்றும் தார்மீக வலிமையாகும். தோல்வி அடையாத ஆயுதம் வலிமையே. வலிமை என்பது ஒரு வரப்பிரசாதம். அதன் சிறப்பு அறிந்து சேர்த்து வாழ்வது சிறந்த அறிவுடமை ஆகும். வலிமையில் சொல்வலிமை, ஆள்வலிமை, தோள் வலிமை, பொருள்வலிமை எனப்பல்வகை உள. எதுவாயினும் வலிமை நற்செயல்களுக்கே பயன்பட வேண்டும். ஆனால் தீயவழிகளிலும் வலிமை ஊடுருவத் தவறவில்லை.

வலிமையில் உடல் வலிமை, இது ஓரளவுக்குத்தான் பயன்படும். மனவலிமை இது எல்லாவற்றுக்கும் மகுடம். இதனை வைத்து நாம் நேர்வழியில் உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டுவிடாமல் வேகத்தினால் உண்மையான பலன்தரும் என்று ஆராய்ந்து வைராக்கியமாக நிற்பதற்கு அந்த ஆற்றலை செலவழித்தால் வரவேற்கத்தக்கது. உடல் வலிமையானவன் குறிப்பிட்ட சில வியாதிகளுக்கு ஆளாகாமல் சுகமாக இருக்க உதவும். இதைத் தவறான வழிகளில் பயன்படுத்தக் கூடாது. நாம் மிகவும் விரும்பும் அழகு என்னவென்றால் வலிமை, தைரியம், கண்ணியம், பணிவு என்பனவாகும். ஆனால் கோழைத்தனம் கூடாது. வலிமை வேண்டும் ஆனால் தலைக்கனம் கூடாது. பறவைகளுக்கும் வலிமை உண்டு. பறவைகளின் வலிமை என்பது அதன் சிறகுகளில் மட்டுமல்ல அதன் நம்பிக்கையிலும் உள்ளது. வலிமையே வாழ்வு. பலவீனமே மரணம். வலிமை இன்மையே ஒருவனின் துன்பத்துக்குக் காரணம். நாம் பலவீனமாக இருப்பதாலேயே பொய்யும், திருட்டும், ஏமாற்று வேலைகளும் இன்னும் மக்களைவிட்டு அகலவில்லை.

வார்த்தைகளுக்கும் வலிமை உண்டு, வலிமை அதிகம். பிறரைக் காயப்படுத்தாத வார்த்தைகளே வலிமையானவை. கையால் அடிப்பதைவிட வார்த்தைகள் ஏற்படுத்தும் காயங்கள் இன்னும் ஆழமானவை, மறக்க முடியாதவை. வார்த்தைகள் கேடும் விளைவிக்கும், நன்மையும் விளைவிக்கும். வார்த்தைகளின் இந்த வலிமையை உணர்ந்துகொள்ளும் இளையவர்கள்தான் வாழ்க்கையில் முன்னேறும் தகுதியைப் பெறுகின்றனர். சொற்களின் பொருளைப் புரிந்துகொள்வது முக்கியம். எண்ணங்கள் மொழியை மாசுபடுத்தும் என்றால், மொழியாலும் எண்ணங்களை மாசுபடுத்த முடியும். உங்களை மற்றவருக்கு சரியாக அறிமுகம் செய்பவை நீங்கள் பயன்படுத்தும் வார்த்தைகள்தான். உங்கள் மதிப்பை உயர்த்துவதும் தாழ்த்துவதும் அவையே. வார்த்தைகளின் வலிமையை உணருங்கள் வாழ்வில் முன்னேறலாம்.

வலிமைபற்றிச் சிந்திப்பவர்கள் வாழ்நாள் முழுவதும் எழும் சிரமங்களிலும், நன்மையைத் தேடுவதில் விடாமுயற்சியிலும் உறுதியைக் காட்டுகின்றனர். மேலும் சில கொள்கைகளின் கீழ் செயல்பட அனுமதிக்கும் காரணத்தை ஒதுக்கி வைக்காமல் அவர்கள் தைரியத்துடன் பிரச்சினைகளை எதிர்கொள்ள முடிகிறது. வலிமை ஒரு தனிநபரை வலுவாகவும், விடாமுயற்சியுடனும், சில சூழ்நிலைகளில் அவர் உணரும் பயத்தை வெல்லவும் உதவுகிறது. வாழ்க்கையில் எந்தச் சவால்களையும் சமாளிக்க வலிமை இருப்பது முக்கியம். நாம் வலிமையாக இருக்கும்போது பிரச்சினைகள் சிறியதாகத் தோன்றும். நம்முடைய தன்னம்பிக்கை அதிகரிக்கும். மேலும் நமக்கும், நமது அன்புக்கு உரியவர்களுக்கும் ஒரு சிறந்த வாழ்க்கையை உருவாக்கலாம். மக்கள் வலிமையாக இருக்கக் கற்றுக்கொடுக்க முடியும். ஆனால் அந்தப் படிப்பினைகளை நம் வாழ்வில் பயன்படுத்துவது நமது சொந்த விருப்பம் என்பதால் சிலவேளைகளில் பயன்படுத்துவது விலகிச் செல்லவும்கூடும். நீங்கள் வாழ ஒரே ஒரு வாழ்க்கை மட்டுமே உள்ளது. வலுவாக இருங்கள். மற்றும் மழைக்குப் பிறகு எப்போதும் ஒரு வானவில் இருக்கும் என்று நம்புங்கள். நீங்கள் வலுவாக இருப்பதில் கவனம் செலுத்த உதவும் வலிமை. உங்களின் குறிக்கோள் மீதான உங்களின் நம்பிக்கையும், உழைப்பும் வலிமையாக இருக்கும்போது இடையில் வரும் இடைக் கற்களான தோல்விகள் உங்களை ஒருபோதும் தடுக்க இயலாது. நிச்சயம் உங்களை வாழ்க்கை ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அடித்துக் கீழே தள்ளும். அப்போது உங்கள் வலிமையால் மீண்டும் எழுந்து நிற்பவன் மட்டுமே வெற்றி அடைகிறான். வலிமையே மகிழ்ச்சிகரமான, நிரந்தரமான, வளமான வாழ்க்கை ஆகும். எனவே வலிமை பெறுமதியானது என்பதை மறந்துவிடாதே.



மனிதன் உடல்வலிமை அளவிலும், மனவலிமை அளவிலும் உலகில் உள்ள உயிரினங்கள் அனைத்தையும்விட கீழானவன் ஆகிவிட்டான். மனிதனின் ஆதிஉள்ளுணர்வும், பகுத்தறிவும் மழுங்கிப்போய் வருடங்கள் பல ஆகிவிட்டன. இதிலிருந்து விடுபடுவது கடினமல்ல. வலிகளை வலிமையால் வெல்லப் பழக வேண்டும். இல்லையேல் வாழ்வு வலிகள் நிறைந்ததாக இருக்கும். ஒருவர் உடல், அறிவு, பொருள் என எவ்வளவு வலிமையானவராய் இருந்தாலும் அதனால் தானென்ற அகங்காரமின்றி மனதளவில் மென்மையானவராய் இருப்பதும், செயல்படுவதுமே வலிமையிலும் மென்மை. ஒருவர் மனதாலும், உடலாலும் எவ்வளவு மென்மையாகப் பழகுபவராய் இருந்தாலும் எவருக்கும் அல்லது எதற்கும் அஞ்சாமல் நேர்மையாய் இருப்பதில் உறுதியாய் இருப்பதே மென்மையிலும் வலிமை. நல்ல எண்ணங்களே நம்மை முன்னேற்றுகிறது. நாம் அடுத்தவர்களுக்குத் தீயவை நினைத்தால் நம் எண்ணங்களில் வலிமையால் நமக்கே அது வந்து சேரும். பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை மறந்துவிடாதே. உன்னால் ஒருவன் கண்ணீர் சிந்தும்படி நடந்துகொள்ளாதே. அந்தக் கண்ணீர்த் துளிகள் பாவத்தின் கணக்கில் சேர்ந்துவிடும். மற்றவர்களை கீழே தள்ளிவிடுவதால் நாம் வலிமை அடைவதில்லை. அவர்களைத் தூக்கிவிடும்போதுதான் நாம் வலிமை அடைகிறோம். வலிமை நம்மை யாரென்று நமக்கே புரியவைக்கும். புரியவைக்கின்றது. உடலால் மட்டும் வாழ்வதுதான் வாழ்க்கையல்ல. மனதால் மனவலிமையுடன் வாழ்வதுதான் வாழ்க்கை.

வெல்ல வேண்டும் என நினைப்போருக்கு எந்தவிதமான விமர்சனங்களையும் தூக்கி எறியும் வலிமை இருக்க வேண்டும். பிடியில் வலிமை இருந்தால் நொடியில் வெற்றி. மனதளவில் சுருக்கம் இருக்கக் கூடாது. இருந்தால் வலிமையான விரிந்த சிந்தனைகள் வராது. வலிமையுடன் முன்னெடுக்கப்படும் காரியம் வெற்றி அடையும். வாழ்க்கையின் நகர்வில் வலிமையால் மற்றவருக்குத் துன்பம் நிகழ்ந்து விடக் கூடாது. முறுக்கான நிலையில் வலிமையில் கூடிய கவனமும், பொறுமையும் வேண்டும்.

அனுபவசாலிகளதும், பெரியோர்களதும் வலிமை பற்றிய கருத்துகள் வலிமைக்கு பெறுமதி சேர்க்கின்றன. “தோல்வி என்னை ஒருபோதும் தடுக்க இயலாது. எனது வெற்றிக்கான இலக்கு வலிமையாக இருக்கும்போது” என்கிறார் அப்துல்கலாம். “உடலின் வலிமையைவிட உள்ளத்தின் வலிமை மிகவும் உயர்வானது”, “வலிமை உடலின் ஆற்றல் இல்லை. உள்ளத்தின் பண்பு”, வலிமையும் வீரமும் மிக்கவர்களின் ஆயுதம் அகிம்சை” இவை மகாத்மா காந்தியின் பொன்மொழிகள். “வெற்றிகளைச் சந்தித்தவனது இதயம் பூவைப்போல மென்மையானது. தோல்வியை மட்டுமே சந்தித்தவன் இதயம் இரும்பைவிட வலிமையானது”, உனக்குத் தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளே உள்ளன”, உன்னை நீயே பலவீனன் என நினைப்பது மிகப்பெரிய பாவம். “நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய் உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்”, “என்னால் இயலாது என ஒருபோதும் எண்ணாதே. ஏனெனில் நீ வரம்பில்லா வரம்பில்லா வலிமை பெற்றவன்” இவை விவேகானந்தர் பொன்மொழிகள். “வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச்செயல்” எனும் குறள்மூலம் ஒரு செயலைத் தொடங்குமுன் அதன் வலிமையையும், தனது வலிமையையும், துணை நிற்போர் வலிமையையும் உணர்ந்து தொடங்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

எதிரிகளுக்கு நீங்கள் அளிக்கும் மிகப்பெரிய தண்டனை பழிவாங்குவதல்ல. நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதும், வலிமையானவராக இருப்பதுமே ஆகும். வலிமை என்பது தாக்குவது அல்ல. தாங்குவது. வெற்றிக்கும் வலிமைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தவறுகளை ஒப்புக்கொள்ளும் தைரியமும், அவற்றை விரைவில் திருத்திக்கொள்வதற்கான வலிமையும்தான் வெற்றியின் இரகசியம். வலிமை என்பது ஒரு வரப்பிரசாதம் என்பதை மெலியவிடாது வலிந்து வைத்திருப்பதன்மூலம் வாழ்வு சுமூகமாக நகரக்கூடியதாக அமையும்.




## தைப்பொங்கல் அன்பு வாழ்த்து!

இல்லமெலாம் எழில்பொங்க
இனிமைபொங்க
இதயங்கள் அனுதினமும்
அன்பிற் பொங்க
நல்லுளங்கள் வாழ்த்திடவெம்
நலங்கள் பொங்க
நனிசிறந்து வாழ்வுயர
மகிழ்ச்சி பொங்க
நெல்வழங்கும் உழவர்வளம்
நிரம்பிப் பொங்க
நினைந்திறைவன் தாள்தொழுது



வாழ்த்து கின்றேன்
எல்லையிலா உயிர்களுக்கு
ஒளியைப் பொங்கும்
எழுகதிரோன் அருள்பொங்கப்
பொங்கு வோமே!

அன்புடன்



பல்வைத்திய கலாநிதி இளமுருகனார் பாரதி

# வங்கிகள், நிதி நிறுவனங்களோடு முரண்பாடுகள், தீர்த்துவைக்கத் தயாராகவுள்ள நியாயமன்றம்



சிவ. பஞ்சலிங்கம், B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999

வங்கிகள், மற்றும் நிதி நிறுவனங்களோடு உள்ள உங்களின் நடவடிக்கைகளில் சில இடங்களில் சில அதிருப்திகள், அதனைத் தொடர்ந்து நியாயமற்ற இழப்புகளையும் எதிர்கொள்ளவேண்டி வந்திருக்கலாம்.

### இப்படியான சந்தர்ப்பங்களில் இதற்குரிய தீர்வு என்ன?

குறிப்பிடப்பட்ட வங்கிக் கிளையின் மேல் நிலை அதிகாரிகளோடு முதலில் பேசி தீர்வு காண முயல்வது. அங்கும் நியாயமான தீர்ப்புக் கிடைக்காதுவிட்டால், என்ன பிரச்சினை என உங்களிடமிருந்து தகவலினைப் பெற்று தீர்வு வழங்கவென தயாராக அந்தக் குறிப்பிடப்பட்ட வங்கியின் நியாய மன்றம் (Ombudsman office) ஒன்று தயாராகவுள்ளது.

உதாரணமாக TD Canada Trust Bank என்றால் அந்த வங்கியின் TD Canada Trust banking ombudsman office சொல்லப்படும் நியாயமன்றத்துக்கு உங்களின் முறைப்பாட்டினைச் சமர்ப்பிக்கும்போது பிரச்சினையினை சட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய, இரு பக்கமும் சொல்லப்படும் நியாயங்களைப் பரிசீலனை செய்து தீர்த்துவைப்பதே அவர்களின் செயல்பாடாகும்.

### அங்கும் உங்களுக்கு நியாயமான தீர்ப்பு கிடைக்கவில்லையென்றால் அடுத்த இறுதிக் கட்டம் என்ன?

கனடிய நிதி அமைச்சின் கீழ் செயல்படும் வங்கிகளின் தலைமை நியாயமன்றத்திற்கு (Ombudsman for Banking Services and Investments) மேன்முறையீடு செய்யலாம்.

அங்கு இறுதியாக மேன்முறையீடு செய்யும்போது தீர்வு உங்களுக்குச் சாதகமாகவும் வரலாம். சாதகமில்லாத தீர்ப்பாகவும் அமையலாம்.




இந்நியாயமன்றத்தின் இணையத்தளத்தினுள் வழங்கப்பட்ட தீர்ப்புகள் பதிவுகளாக எவரும் படித்துக் கொள்வதற்காக உள்ளது. பல தீர்ப்புகளை கனடாவின் ஆங்கில ஊடகங்கள் பகிரங்கத்துக்குக் கொண்டுவந்தன.

அங்கு படித்த ஒரு சில கதையினைச் சொல்லுகின்றேன். ஒரு படிப்பினைக்காகக் கேளுங்கள்.

$90,000 தொகைக்கு குறிப்பிடப்பட்ட ஒருவரின் பெயரில் அவரது வர்த்தக நிறுவனத்தின் கணக்கிலிருந்து (Business account) காசோலை எழுதிக் கொடுத்தீர்களா? பணத்தினைக் கொடுக்கலாமா? என அந்தக் கனடாவின் சிறு வர்த்தகருக்கு அவரது வங்கியிலிருந்து தொலைபேசி அழைப்பு வந்ததும் அவர் திகைத்துப் போனார்.

அவரது வர்த்தக நிறுவன அலுவலகத்திலிருந்து அங்கு பணிபுரியும் ஊழியர் ஒருவர் திருடி, போலிக் கையொப்பமிட்டு காசோலை ஒன்றினைப் பிறப்பித்திருந்தார் என்பது பிடிபட்டுவிட்டது. ஆனால் என்ன ஆச்சரியம்?

அதே நபரால் சில நாட்களுக்கு முன்பு $21,500க்கு போலிக் கையொப்பமிட்டு எழுதிய காசோலையில் பணப்பரிவர்த்தனை செய்யப்பட்டுவிட்டது என்பதும் வங்கி வாடிக்கையாளருக்கான அந்த வர்த்தகருக்கு அந்தக் கணமே தெரியவந்தது.

இழந்த $21,500 பணத்தினையும் தமது வங்கி திருப்பித் தரவேண்டும் என்ற முறைப்பாட்டினை அவரது வங்கிக் கிளையும் நிராகரித்து, தொடர்ந்து அந்த வங்கியின் நியாயமன்றத்துக்கு (Ombudsman office) எடுத்துச் சென்ற போது அவர்களும் அதனை நிராகரித்துவிட்டனர்.

இறுதியாக இக்கோரிக்கை கனடாவின் சகல வங்கிகள், நிதி நிறுவனங்களிற்கு எதிரான முறைபாடுகளை விசாரித்துத் தீர்த்து வைக்கும் Ombudsman for banking services and investments நியாயமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யப்பட்டது.

பிரச்சினை 'கனடாவின் கொடுப்பனவுகள் சட்டங்கள்' (Canadian payments act & Bills of exchange act) இந்த விடயத்தில் என்ன வரையறை செய்கின்றது என்பது ஆராயப்பட்டு இறுதியில் ஏமாற்றத்துக்கு உள்ளான வாடிக்கையாளரின் அந்த இழப்புத் தொகையினை வங்கி கொடுத்துத் தீர்க்க வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதேபோல் கனடாவில் வாழும் ஈழத் தமிழரோடு தொடர்புபட்ட இன்னொரு விடயம்.

வங்கியினூடாகப் பங்குச் சந்தையில் பங்குகள் வாங்கி விற்கும் பிரிவின் ஊழியர் ஒருவர் தமது தொழில் விதிமுறைகளை மீறி தமது அதிகாரத்தினைப் பயன்படுத்தி இரகசியமாக இலாபம் எடுக்க முயற்சித்தார். அவரோடு அப்பாவித்தனமாகத் தொடர்பு வைத்த இரு ஈழத் தமிழர் ஆளுக்கு 10,000 U.S டொலர் தொகையினை இழக்கவேண்டிய துரதிர்ஷ்ட நிலைமை ஏற்பட்டது.

இறுதியில் இந்த நிலைமை நியாயமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட போது, அரைவாசித் தொகையினை பணத்தினை இழந்தோருக்கு அந்தக் குறிப்பிட்ட வங்கி வழங்கவேண்டும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

எனவே இறுதியாக இங்கு சொல்வது யாதெனில் கனடா வாழ்வில் பல சந்தர்ப்பங்களில் பிரச்சினைகள் நியாயத்தினை மீறி வந்து தாக்கும். அந்த இடங்களில் எல்லாம் முறையாக விசாரித்து நியாயம் வழங்க பல அரச நியாயமன்றங்கள் உள்ளன. எதுவிதமான செலவுகளுமின்றி எப்படி அவர்களை அணுகுவது என்பதனைப் புரிந்துகொண்டு தாங்களாகவே அணுகலாம்.

ஒன்றில் தீர்வு வரும். அல்லது நிராகரிக்கப்படும். அவ்வளவுதான் நடக்கும்.

---

# மாவிட்டபுரம்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தெல்லிப்பளையில் காங்கேசன் துறைமுகத்தில் இருந்து தெற்கே 5 கி.மீ., யாழ்ப்பாணத்திற்கு வடக்கே 17 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. பலாலி விமானத்தளம் மேற்கே 2 கி.மீ. தொலைவிலும், அமைந்துள்ளது. மாவிட்டபுரத்திற்குப் பேருந்து, ரெயில் வசதிகள் உள்ளன.

பல்வேறு பெருமைகள் கொண்ட மாவைக் கந்தன் திருக்கோவில் திருப்பணிகள், யுத்த சூழலுக்குப் பின்பு நிதானமாக நடந்தேறி வருகிறது. கந்தன் அடியார்கள் ஆதரவு இருந்தால், விரைந்து நிறைவேறி குடமுழுக்கும் நடைபெறும். உதவியோருக்கு மாவைக் கந்தனின் அருளும் பூரணமாய்க் கிடைக்கும்.

நன்றி பனையபுரம் அதியமான். தினந்தந்தி

இளவரசி மாருதப்புரவீகவல்லி கூனல் தோற்றமுள்ள முனிவர் ஒருவரைக் கிண்டல் செய்ததினால் அவர் கொடுத்த சாபத்தால், குதிரை முகமும் குஷ்ட ரோகமும் அவளைப் பீடித்துக்கொண்டது. பல சிகிச்சைகள் செய்தும் அவளுக்கு நோய் மாறவில்லை. அவள் தரிசிக்காத கோவில்கள் இல்லை. அவளது நோய் தீராததைக் கண்டு தவசி ஒருவரின் வாக்குப்படி வட இலங்கையில் உள்ள கீரிமலை என்ற திவ்விய தீர்த்தத்தில் நீராடச் சென்றாள். அவளுக்குத் துணையாகச் செவிலித்தாய், பணிப்பெண்கள் போர்வீரர்களும் சென்றனர். அவர்கள் தங்கியிருந்த இடம் 'குமாரத்தி பள்ளம்' எனவும், அவள் குளித்த கிணறு இருந்த இடம் 'வல்லிக் கிணற்றடி' என இடப் பெயர்களுடையன. இவ்விடங்கள் மாவிட்டபுரத்து அருகே காணப்படுகின்றன.

மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகம் பிறர் பார்வைக்கு நீங்கினாலும் அவளது சொந்தப் பார்வையிலிருந்தும் நினைவில் இருந்தும் நீங்கப் பெறவில்லை. அதன் காரணம் என்ன என்று ஆராய்ந்தபோது முருகன் வழிபாட்டுக்கு முதல் பிள்ளையாருக்கு வழிபாடு செய்யாததே எனத் தெரியவந்தது. தான் செய்த தவறுக்கு பிராயச்சித்தமாக ஏழு இடங்களில் பிள்ளையாருக்குக் கோவில் அமைத்து மாருதப்புர



வீகவல்லி வழிபட்டாள். கொல்லங்கலட்டி, வரத்தலம், ஆலங்கொல்லை, கும்பிழாவளை, பெருமாக்கடவை. ஆலங்குழாய், கல்வளை என்பனவே அப்பிள்ளையார் தலங்களாகும். பிள்ளையாருக்குக் கோவில் அமைத்து வழிபட்டபின் இளவரசியின் குதிரைமுகம் அவளது பார்வைக்கு முற்றாக நீங்கியது என்கிறது மரபு வழி வந்த கதை.

கி.பி 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உக்கிரசிங்கன் என்ற மன்னன் குதிரை முகம் நீங்கி அழகிய தோற்றத்தோடு இருந்த மாருதப்புரவீகவல்லிபற்றி அறிந்தான். அவளைச் சந்தித்து அவள் மேல் காதல் கொண்டான். தான் உக்கிரசிங்கனை மணம் முடிக்க வேண்டுமாகில் முருகன் கோவில் ஒன்றினைக் கட்டச் சம்மதிக்க வேண்டும் என்றாள். அவளது வேண்டுகோளின்படி மன்னனும் சம்மதம் தெரிவித்தான். மாவிட்டபுரம் முதலாகத் தென் திசைகளில் ஐந்து முருகன் கோவில்களை ஸ்தாபித்தாள். மாருதப்புரவீரகவல்லி முருகன் விக்கிரகத்தை தென்னிந்தியாவில் இருந்து தன் தந்தை மூலம் வரவழைத்தாள். காங்கேயன் (முருகன்) விக்கிரகம் இந்தியாவில் இருந்து வந்திறங்கிய துறைமுகம் காங்கேசன்துறை எனப்படுகின்றது. அத்துறைமுகம் மாவிட்டபுரத்துக்கு வடக்கே இரு மைல் தூரத்தில் உள்ள ஊராகும்.

- நன்றி: பத்மா சச்சிதானந்தம்

Vlambaram - January 15, 2025.qxp_Vlambaram-Front 2025-01-15 1:55 PM Page 20



# வெற்றி எது? தோல்வி எது?

எல்லோரும் வெற்றியடைய விரும்புகின்றனர். யாரும் தோல்வியடைய விரும்புவதில்லை. இது எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆனால், வெற்றி, தோல்வி என்பவை நிகழ்ச்சிகளை வரையறுக்கும் சொற்கள், மனிதரை வரையறுப்பவை அல்ல. ஒருவர் ஒரு செயலை வெற்றிகரமாகச் செய்கிறார் அல்லது ஒரு மைல் கல்லை வெற்றிகரமாக எட்டுகிறார் இல்லாவிட்டால், அவர் அந்தச் செயலில் தோல்வி காண்கிறார் அல்லது அந்த மைல்கல்லை எட்டுவதில் தோல்வியடைகிறார். அதைவைத்து அவர் ஒரு முழுமையான வெற்றியாளர்/முழுமையான தோல்வியாளர் என்று சொல்ல இயலாது.

ஒரு விடயத்தில் வெற்றிபெற்ற ஒருவர், இன்னொரு விடயத்தில் தோற்கலாம். ஒரு விடயத்தில் தோற்ற ஒருவர், இன்னொரு விடயத்தில் வெல்லலாம். ஒரு மிகப்பெரிய வெற்றியாளர் (அப்படியொரு சொல் இருந்தால்) வங்கியில் நிறைய பணம் வைத்திருக்கலாம். ஆனால் ஒரு பெற்றோராக அல்லது கணவராக/ மனைவி யாக அவர் முழுத்தோல்வி அடைந்திருக்கலாம். அதேபோல், தான் நடத்திய தொழிலில் முழுத்தோல்வி அடைந்த ஒருவர், மிக நல்ல பெற்றோராக அல்லது அருமையான நண்பராக இருக்கலாம்.

ஆக, வெற்றி, தோல்வி என்பவை ஒரு செயல் எப்படி நடந்தது என்பதைதான் குறிக்கின்றன. தனிநபர்களை வரையறுப்பதில்லை. ஆனால், இந்த வித்தியாசம் பலருக்குப் புரிவதில்லை.

"நான் வெற்றிபெற்றேன், என் பிள்ளையும் வெற்றிபெற வேண்டும்" என்கின்றனர். இப்படி எண்ணுவோரால் ஒரு சிறிய தோல்வியைக்கூடத் தாங்க இயலாது. இன்னொரு பக்கம், சில பெற்றோர் தங்களைத் தோல்வியடைந்தோராகக் கருதுகின்றனர், "என் பிள்ளை இப்படி ஆகி விடக்கூடாது" என்று எண்ணுகின்றனர். இவர்களுடைய பிள்ளை ஒரு தேர்வில் தோல்வி அடைந்துவிட்டால் போதும், தோற்றுப்போனவன் என்று அதற்கு முத்திரை குத்திவிடுகின்றனர். வாழ்நாள் முழுக்க அவர்கள் தோல்வி அடைந்தவர்களாகவேஇருக்கப் போகின்றனர் என்று கருதுகின்றனர். உண்மையில், அந்தக் குழந்தை ஒரு தேர்வில்தான் தோல்வி அடைந்திருக்கும். இன்னும் பல வாழ்க்கை அம்சங்களில் அது வெற்றி பெற்றிருக்கும். உதாரணமாக, அந்தக்



குழந்தை விளையாட்டில் சிறந்து விளங்கலாம். அல்லது பிறரிடம் பச்சாதாபத்துடன் பேசலாம், நல்ல ஓவியராக இருக்கலாம், அருமையாகப் பாடலாம், மேடையேறிப் பேசலாம், பிரச்சினைகளைப் புதுச்சிந்தனையோடு தீர்த்து வைக்கலாம், நேர்மையாக இருக்கலாம், பிறருக்கு உதவலாம், பிறருடன் அன்பாகப் பழகலாம். ஆனால், இவையெல்லாம் பெற்றோருக்குத் தெரிவதில்லை, அந்தக் குழந்தை ஒரு தேர்வில் தோல்வி அடைந்தவுடன், "தோற்றுப் போனவன்" என்று அதற்கு முத்திரை குத்துகின்றனர். அதேபோல, ஒருவருக்கு வேலை போய் விட்டது என்றால், "நான் தோற்றுவிட்டேன்" என்று அவரே நினைத்துவிடுகிறார். பலர் அந்த நினைவிலேயே மூழ்கி விழுந்து விடுகின்றனர், மீண்டெழுந்து இன்னொரு வேலையைத் தேட அவர்களால் இயலுவதில்லை. அந்த ஒரு வேலையைத் தங்களால் செய்ய இயலவில்லை என்பதால், அது தங்கள்மீது விதிக்கப்பட்ட தீர்ப்பு என்று இவர்கள் எண்ணி விடுகின்றனர். தங்கள் வாழ்க்கையையே தோல்வி அடைந்ததாகக் கருதுகின்றனர். மீண்டு வந்து வெல்லுவதில்லை. தங்களை வேறுவிதமாக எண்ணுவதில்லை.

பெற்றோர் தங்கள் குழந்தைகளை அவர்களுடைய எல்லாப் பலங்கள், பலவீனங்களுடனும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு, அவர்கள் வெற்றி, தோல்வி ஆகியவற்றை நிகழ்வுகளை வரையறுக்கும் சொற்களாகப் புரிந்துகொள்ள வேண்டும், மக்களை வரையறுக்கும் சொற்களாக அல்ல. இதற்கு, அவர்கள் தங்களுடைய வாழ்க்கையையே இன்னொருமுறை பார்க்க வேண்டும், தாங்கள் சில விஷயங்களில் ஜெயித்திருக்கிறோம். சிலவற்றில் தோற்றிருக்கிறோம் என்று புரிந்துகொள்ள வேண்டும். தாங்கள் எதிலெல்லாம் தோற்றோம் என்று அவர்கள் காணவேண்டும். அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்தத் தோல்விகளைப்பற்றிப் பேசவேண்டும். சங்கடப்படக்கூடாது. பழைய தோல்விகளை ஏற்றுக்கொண்டு, அந்த அனுபவத்திலிருந்து தாங்கள் என்ன கற்றுக் கொண்டோம் என்பதைச் சிந்திக்க வேண்டும். தாங்கள் சில அம்சங்களில் தோல்வியடைந்துள்ளோம் என்பதைக் குழந்தைகளிடம் சொல்லத் தயங்கக் கூடாது.

தங்களுடைய தோல்விகளைப் பற்றிக் குழந்தைகளிடம் பேசவேண்டும். சாப்பாட்டு நேரத்தில் மற்ற விஷயங்களைப் பேசுவது போலவே, தங்களுடைய தோல்விகளையும், அதைத் தாங்கள் எப்படிச் சமாளித்தோம் என்பதையும் சொல்ல வேண்டும். அப்போதுதான், குழந்தைகள் தோல்வியைக்கண்டு அஞ்சமாட்டார்கள். அதுவும் வாழ்க்கையில் ஒரு பகுதிதான். கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புத்தான் என்று நினைப்பர். தங்களைத் தோல்வி அடைந்தோராக எண்ணிக் கொள்ளமாட்டார்கள்.

தோல்வியில்லாத வாழ்க்கையே கிடையாது. ஒருவருக்குத் தோல்வி வந்தால், அவர் அதனைப் பயன்படுத்தித் தன்னைத் தானே இன்னும் ஆழமாகப் புரிந்துகொள்ளவேண்டும், அந்தச் சூழலிலிருந்து புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். இதற்கான வாழ்க்கைத் திறன்களைப் பெற்றோர் குழந்தைகளுக்குச் சொல்லித்தருவது அவசியம்.

இது தான் பெற்றோர் குழந்தைகளுக்குத் தரக் கூடிய விலைமதிப்புமிக்க பரிசு. வங்கியில் நிறையப் பணம் சேர்த்து வைப்பதைவிட, இந்தப் பரிசைக் குழந்தைகளுக்குத் தரலாம். இதன்மூலம், அவர்கள் தோல்வியைக்கண்டு துவளாத குணத்தைப் பெறுவர். தடைகள் வந்தால் எதிர்த்து நிற்பர். இந்த வாழ்க்கைப் பாடத்தை அவர்கள் எவ்வளவு விரைவில் கற்றுக் கொள்கின்றனரோ அவ்வளவு நல்லது.

ஆனால், குழந்தைகள் தாங்கள் காண்கிற, அனுபவிக்கிற விஷயங்களில் இருந்துதான் பாடம் கற்கின்றனர். பெற்றோர் சொல்லும் விஷயங்களில் இருந்தல்ல. ஆகவே, பெற்றோர் வெற்றி, தோல்வியை எப்படிக் கையாள்கின்றனர் என்பதைக் குழந்தைகள் கவனிக்கும், அதன்படி தங்களுடைய வெற்றி, தோல்வியைக் கையாளக் கற்றுக்கொள்ளும். பெற்றோர் தங்கள் தோல்வியைத் தைரியமாக எதிர்கொள்ளவேண்டும். இதைக் குழந்தைகள் பார்க்கவேண்டும். அவர்களையே லட்சியபிம்பமாக எண்ணி, அதனைப் பின்பற்றவேண்டும். அதேபோல், பெற்றோர் தங்களுடைய தோல்விகளில் இருந்து பாடம் கற்றுக்கொள்ளவேண்டும். அதைக் குழந்தைகள் பார்க்கவேண்டும். பெற்றோர் விழுவதையும், துள்ளி எழுவதையும் குழந்தைகள் பார்க்கவேண்டும். அப்படித் துள்ளியெழும்போது, அவர்கள் புதிய உயரங்களுக்குச் செல்லலாம். அல்லது மீண்டும் கீழே விழலாம். பெற்றோர் வெற்றியடைவதையும் குழந்தைகள் பார்க்கவேண்டும். அவர்கள் வெற்றியை எப்படிக் கையாள்கின்றனர் என்பதைப் பார்க்கவேண்டும். பெற்றோர் வெற்றியை அனுபவிப்பதைக் குழந்தைகள் பார்க்கவேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால், பெற்றோர் வெற்றி, தோல்வியை அனுபவிப்பதைக் குழந்தைகள் பார்க்கவேண்டும். அதைவிட முக்கியமாக வெற்றி, தோல்வி போன்றவை வாழ்க்கையில் வரும் தாற்காலிக நிகழ்வுகள் என்று அவர்கள் உணர வேண்டும். அந்தச் சொற்களைக்கொண்டு தங்கள் வாழ்க்கைக்கே முத்திரைகுத்த இயலாது என்று அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஜோன் வூடன் இதனை அழகாக எழுதினார், "வெற்றி என்பது நிறைவான நிலையல்ல, தோல்வி என்பது மோசமான நிலை அல்ல. எந்த நிலையிலும் தைரியமே முக்கியம்."

தடைகள் வந்தால் தைரியத்தோடு எதிர்ப்பதையும், வெற்றி வந்தால் பணிவோடிருப்பதையும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லித்தரவேண்டும். அப்போதுதான் குழந்தைகளும் அதேபோல் வாழத் தொடங்குவர். இதன்மூலம், அவர்கள் எதையும் தாக்குப்பிடிக்கிறவர்களாக வளர்வர். வாழ்க்கையில் எல்லாச் சவால்கள், மகிழ்ச்சிகள், வெற்றிகள், தோல்விகளையும் சந்திக்கத் தயாராக இருப்பர்.

எதிர்மறையோ, நேர்விதமோ, பெற்றோர் தரும் தாக்கம் குழந்தைகள் மனத்தில் ஆழமாகப் பதியும், அவர்கள் வாழ்க்கையைப் பாதிக்கும். ஆகவே, நேர்விதத்தை அதிகரித்து, எதிர்மறையைக் குறைக்க வேண்டும். அதுவே அவர்களுக்கு நல்லது.






நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.

அனுப்புங்கள் Vlambaram@sympatico.ca

யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

**படித்ததில் பிடித்தது**

## தமிழின் சிறப்பு

### 'வே' என்றால் 'மறை' (மறைத்து வைத்தல்)




1. மறைந்திருந்து தாக்குவதால் **'வே'ட்டன்** எனப்பட்டான்.
2. சுற்றி மறைத்துப் பாதுகாப்பதால் **'வே'லி** எனப்பட்டது.
3. சுடுநீரில் மூலிகைகள் இட்டு துணி கொண்டு முகத்தை மூடி, முகர்ந்து நோய் போக்கும் நிகழ்வு **'வே'து** பிடித்தல் எனப்பட்டது.
4. தாவர வேர் மண்ணுக்குள் மறைந்து கிடப்பதால் அது **'வே'ர்** ஆனது.
5. பெண்ணின் அடர் கூந்தல் அவள் முழு உடலையும் கவிழ்த்து மறைப்பதால் சங்க இலக்கியங்களில் **'வே'ய்குழல்** எனப்பட்டது.
6. உடல் பாகங்களையும், மானத்தையும் மறைத்துக் காப்பதால் **'வே'ட்டி** எனப்பட்டது.
7. உண்மை முகத்தை மறைத்து இருப்பதாலேயே நடிகர்கள் **'வே'டம்** போடுவதாகச் சொல்கிறோம்.
8. மறைவாக, விரைவாகச் செல்வதால் **'வே'கம்** ஆனது.
9. கசப்பு வெளியே தெரியாமல் இருப்பதால் **'வே'ம்பு** எனப்பட்டது.

- சீலன்